# பாட்டாளி சிந்தனை

Volume 33 No 2
சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)
SUCI (Communist)
October 2022
தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ்
விலை ரூ 5

## புரட்சிகரக் கட்சியாகிய எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கு வெகுஜன குணாம்சத்தை உருவாக்குவீர்

### – சிப்தாஸ் கோஷ்

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபகப் பொதுச் செயலாளரும், பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், இக்காலகட்டத்தின் தலை சிறந்த மார்க்சிய சிந்தனையாளர்களில் ஒருவருமான தோழர் சிப்தாஸ் கோஷின் பிறந்த நூற்றாண்டை யொட்டி (05.08.1923–05.08.2023), 1974ல் கொல் கத்தாவில் அரசியல் வகுப்பில் அவர் ஆற்றிய உரையின் சில அம்சங்களை இங்கு வழங்குகிறோம்.*

நமது கட்சி துவங்கிய நாள்முதல் தலைவர்கள், தொண்டர்களின் பண்பை வளர்த்தெடுக்க நாம் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வந்தோம். குறிப்பாக, கம்யூனிச குணாம்சத்தின் நெறிகளை அவர்கள் வளர்த்துக் கொள்ள சிறப்பு கவனம் காட்டினோம். இவை இல்லாமல் கம்யூனிச சித்தாந்தத்தின் அடித்தளத்தை பலமாக நிறுவ முடியாது. தோழர்களின் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தது சரிதான் என்றாலும் அது ஒரு பக்கத்திற்கு மட்டுமே அழுத்தம் கொடுத்துவிட்டது என நான் இப்போது கருதுகிறேன். நாம் இப்போது என்ன பார்க்கிறோம் என்றால், கட்சியில் பலரும் இதற்கு மட்டுமே அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்புகிறார்கள். ஆனால், இது குறித்து நான் என்ன யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை உங்கள்முன் பகிர விரும்புகிறேன். என்னுடைய கருத்து, பண்பை வளர்க்கும் முக்கியத்துவத்தில் சற்றும் தொய்வு விழக்கூடாது. ஆனால் நான் இன்னமும் நமது ஆரம்ப கால கட்டத்திலேயே இருக்கவில்லை.



சிப்தாஸ் கோஷ்

உயர்ந்த கட்டத்திற்கு செல்ல வேண்டிய காலம் வந்துவிட்டது. முன்பு நமது கட்சி பிரச்சாரம் செய்யும் கருவாக அல்லது சிறு குழுவாக இருந்தது. அப்பொழுது கட்சித் தோழர்கள் மீது இருந்த கடமை, ஒரு கருத்தை அறிமுகப்படுத்தி, அனைத்து சக்தியையும் திரட்டி மிகுந்த அர்ப்பணிப்புடன் மக்களிடையே பிரச்சாரம் செய்வதாக இருந்தது. மக்களிடையே ஒரு குறிப்பிட்ட சிந்தனை அல்லது கருத்தைப் பரப்ப தோழர்கள் அன்று முயற்சித்துக் கொண்டிருந்தனர். இப்போது நாம் அந்தக் கட்டத்தை கடந்து இரண்டாம் கட்டத்திற்கு வந்துவிட்டோம். இந்த இரண்டாம் கட்டத்தில், வெறுமனே சில சிறிய பகுதிகளில் சில அமைப்புகளை உருவாக்குவதுடன் நாம் நமது பணிகளை சுருக்கிக்கொண்டுவிட்டால் போதாது. இந்த இரண்டாவது கட்டம் என்பது, மிகப் பரந்த அளவில் மக்கள் போராட்ட இயக்கங்களை நடத்தி நமது அமைப்பை மிகப் பெரிய அளவில் விரிவாக்க நாம் முன்முயற்சி எடுக்கும் கட்டமாகும். ஏனெனில், கட்சியை வெகுஜன கட்சியாக மாற்றும் நேரம் வந்து விட்டது.

இந்த நேரத்தில், பண்பை வளர்க்கும் பணிக்கு அதிகபட்ச நேரம் ஒதுக்குவது உசிதமாகாது. இப்போது நாம் மற்றொரு உயர் பொறுப்பை சுமக்க முன்வர வேண்டும். இதைச் செய்யாவிட்டால், தோழர்களின் பண்பைக்கூட நாம் காப்பற்ற முடியாமல் போய்விடும். மக்களை அமைப்பு ரீதியாகத் திரட்டாவிட்டால் நமது புரட்சிகர பண்பின் வீரியத்தையும் பராமரிக்க முடியாது. இன்று எது நமக்கு முக்கியம் என்றால், அரசியல் முன்முயற்சியை அதிகரிப்பதும், யாருடைய அறைகூவலுக்கும் காத்திராமல் எந்த மக்கள் பிரச்சினையிலும் உள்ளே குதித்து இயக்கத்தில் இறங்கி, நமது முன் முயற்சியால் உடனடியான செயல்பாட்டில் முன்னணியில் நிற்பதாகும். நமது தோழர்கள் போதிய பண்பைப் பெற்றிருந்தாலும்,

தொடர்ச்சி *6*ம் பக்கம்

## ஈவிரக்கமற்று பெட்ரோல் மீது வரி உயர்த்தி மக்களை மேலும் கசக்கிப் பிழியும் பாஜக அரசாங்கம்

தொழில் துறையுடன் முழுமையாக கலந்து பேசிய பிறகே வரி விதிக்கப்படுவதாகக் கூறி உள்நாட்டில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெய் மீதான மிகப்பெரும் வரியையும் சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி மீது கூடுதல் வரிவிதிப்பதையும் கடந்த செப்டம்பர் 5ம் தேதி பாஜகவின் நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நியாயப்படுத்தினார்.

“நான் மிகவும் வெளிப்படையாக கூறுகிறேன். சுத்திகரிப்பு ஆலைகளின் மையமாக திகழ இந்தியா விரும்புகிறது, சுத்திகரிப்பு ஆலைகளில் முதலீடு செய்ய இந்தியா விரும்புகிறது, அரசுக்கு வருவாய் ஈட்டுவதை நோக்கமாக் கொண்டு வரி விதிக்காமலிருப்பதை உறுதிப்படுத்த இந்தியா விரும்புகிறது, எனவே மிகப்பெரும் லாபம் தரும் வரி என்ற நம்பிக்கை தவறானதாகும். ஏனெனில் தொழில் துறையுடன் முழுமையாக கலந்து பேசியபிறகே விலையும் வரி விகிதமும் முடிவு செய்யப்பட்டது. தொழில்துறை எங்களுக்கு அளித்த லாப விகிதத்தை அடிப்படையாகக் கொண்ட அளவு கோல்களுடனேயே நாங்கள் முடிவெடுக்கிறோம்” என எலாரா கேப்பிடல் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் அவர் பேசினார்.

மேலும் அவர், ஒவ்வொரு 15 நாளும் தொழில்துறையுடன் கலந்து பேசிய பிறகே அனைத்தும் செய்யப்படுவதாக தெளிவாகக் கூறினார்.

தொழில் குழுமங்களுடன் கலந்து பேசியே அனைத்தும் செய்யப்படுவதாக அவர் ஒப்புதல் அளித்திருக்கிறார். வரி விதிப்பின் மூலம் லாபமடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துகிறார்களாம்! என்னே பிரமாதம்! பெட்ரோலியப் பொருட்கள் விண்ணில் பறப்பதை எட்டிப்பிடிக்க முடியாமல் இந்திய மக்கள் பரிதவிக்கிறார்கள், ஆனால், தொழில் குழுமங்களுடன் கலந்து பேசிய பிறகே தமது நிதிக் கொள்கைகளை ஆட்சியாளர்கள் தீர்மானிக்கிறார்கள்.

மேலும், இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயின் விலை உயர்வு காரணமாகவே எரிபொருளின் சில்லரை விலை ஏறுகிறது என அரசாங்கம் திரும்பத்திரும்ப கூறிவருகிறது. ஆனால் இந்தியா கச்சா எண்ணெய்யை மட்டும் இறக்குமதி செய்யவில்லை, மாறாக ரஷ்யாவிடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளையும் மிக மலிவான விலைக்கு இறக்குமதி செய்கிறது. புளூம்பெர்க் வர்த்தக புள்ளி விவரங்களின் மதிப்பீட்டின்படி பிப்ரவரி இறுதியிலிருந்து மே மாத துவக்கம் வரை ரஷ்யாவிடமிருந்து 40 மில்லியன் பேரல்களுக்கும் மேல் இறக்குமதி செய்துள்ளது. இது 2021ம் ஆண்டின் மொத்த இறக்குமதியில் 20 சதமாகும். இந்த மூன்றாண்டு கால சராசரியை எடுத்துக் கொண்டால் சமீபத்திய மாதங்களில் சுத்திகரிக்கப்பட்ட ரஷ்ய இறக்குமதியானது மூன்று மடங்காகும். ஆகஸ்ட் 2022ல், பேரல் ஒன்றின் சர்வதேச சந்தைவிலை 100 டாலர்களாக இருந்தபோது ரஷ்யாவின் பிரதான ஏற்றுமதி பிராண்டான ஊரல் (Urals) கச்சா எண்ணெயின் விலை 74.7 யுஎஸ் டாலர்களாகும். ஆனால் இதன் பயன் நாட்டு மக்களுக்கு சென்று சேரவில்லை.

ஆனால், ரஷ்யாவிடமிருந்து மலிவான கச்சா எண்ணெயை வாங்கி எரிபொருள் ஏற்றுமதி செய்து ஏப்ரல்–ஜூன் காலாண்டில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் லாபத்தை 46.3 சதவீதம் உயர்த்தியது. முந்தைய ஆண்டின் 122.73 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஜூன் 30, 2022டன் முடிவடைந்த 3 மாதங்களில் ரிலையன்ஸின் லாபம் 179.55 ($2.25 billion) பில்லியனாக உயர்ந்தது. சர்வதேச சந்தை விலையிலிருந்து மிகவும் தள்ளுபடி விலையில் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெயை நாட்டின் மிகப்பெரும் பொதுத்துறை எண்ணெய் நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனும் 3 மில்லியன் பேரல்களை இறக்குமதி செய்தது. இந்தியாவும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருட்களின் ஏற்றுமதியாளர் என்பது பலருக்குத் தெரியாது. மே மாதம் 5.7 மில்லியன் மெட்ரிக் டன் பெட்ரோலியப் பொருட்களை இந்தியா ஏற்றுமதி செய்தது. இது ஏப்ரல், 2022விட 6% அதிகமாகும். அதிகரிக்கும் தேவையை பூர்த்தி செய்ய இந்திய

தொடர்ச்சி *6*ம் பக்கம்

# வழக்கறிஞர் தீஸ்தா செதால்வத் கைதும் ஜாமீனும் – சில கேள்விகள்

*குஜராத்தில் **2002**ல் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் அனைவருக்கும் நினைவிருக்கும். அதில் சுமார் **58** கரசேவகர்கள் இறந்தனர். உடனே, எரித்தவர்கள் இஸ்லாமியர்கள் என்று ஆர்எஸ்எஸ் பாஜக சங்பரிவாரங்களால் வஞ்சகமாகப் பழிசுமத்தப்பட்டு, குஜராத்தில் மிகப்பெரிய மதவெறியாட்டம் நடந்தது. நூற்றுக்கணக்கில் சாமானிய இஸ்லாமியர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். கர்ப்பிணிகள் உட்பட பெண்கள் கொடூரமாக பாலியல் வன்முறைக்கு ஆளாகி கொல்லப்பட்டனர். குழந்தைகள் சுவற்றில் வீசி நசுக்கி கொல்லப்பட்டனர். காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எசன் சரிஃப், பல முறைகாவல் துறையிடமும், மாவட்ட, தலைமைச் செயலக அதிகாரிகளிடமும், அன்றைய முதல் வரிடமும் உதவி கேட்டு மன்றாடியும்கூட, வீட்டிற்கு வெளியே கைகூப்பி மக்களை தாக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டும், எரித்துக் கொல்லப் பட்டார்.*

*கலவரத்தில் பாதிக்கப்பட்ட பல இஸ்லாமிய மக்களுக்காக வழக்காடி நீதியைப் பெற்றுத் தருவதில் முக்கியப் பங்காற்றியவர்தான் சமூகச் செயல்பாட்டாளரும் மனித உரிமை போராளியுமான திருமதி தீஸ்தா செதால்வத் குஜராத் மதப் படுகொலை சம்பவத்தின் போது அங்கு திருவாளர் மோடி முதலமைச்சராகவும், அமித்ஷா உள்துறை அமைச்சராகவும் இருந்தனர். மாநில அரசாங்கத்தின் மறைமுக ஆதரவில்லாமல் இந்தப் படுகொலை நடந்திருக்க முடியாது என காவல் துறை உயர் அதிகாரிகள் உட்பட பலர் கூறியிருக்கின்றனர். ஆனால் அனைத்துக் குற்றச்சாட்டுகளும் நீதிமன்ற மனுக்களும் சுத்தமாக மூடி மறைக்கப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட அரசாங்கமே, சிறப்பு விசாரணைக் குழுவை நியமித்து, அன்றைய குஜராத் முதல்வர், உள்துறை அமைச்சர் மற்றும் **63** பேர்களை குற்றமற்றவர்கள் என **2012**ல் சான்றுவழங்கிவிட்டது.*

*விசாரணைக் குழு அறிக்கையை குஜராத் நீதிமன்றம் சரி என உயர்த்திப் பிடித்தது. இதனால் அதிருப்தியடைந்த, கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் மனைவி சாகியா சரிஃப், இஸ்லாமி யருக்கு எதிராக நடந்த வன்முறையில் மோடிக்கும் தொடர்பு உள்ளது என்று குற்றப் பத்திரிகையை விசாரணைக் குழுவிடம் தாக்கல் செய்தார். அக்குழு, மனுவை ஏற்றுக்கொள்ள மறுக்கவே, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். அகமதாபாதில் இஸ்லாமியர் வசிக்கும் குல்பர்க் குடியிருப்பில் கொல்லப்பட்ட **68** நபர்களில் அவர் கணவரான எசன் சரிஃபும் ஒருவர். உச்சநீதிமன்றமும் அவர் முறையீட்டில் எந்த முகாந்திரமும் இல்லை எனக் கூறி தள்ளுபடி செய்துவிட்டது. அதே சமயம், வழக்கை திருப்பி, குஜராத்தின் முன்னாள் காவல்துறை அதிகாரிகளான ஆர்பி ஸ்ரீகுமார் மற்றும் சஞ்சிவ் பட் விசாரணைக் குழுவை தவறாக வழிநடத்தி அப்பாவிகளை குற்றவாளி களாக்க முயற்சிப்பதாக அவர்கள் மீதே குற்றம் சாட்டியது. இந்தத் தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் **24.06.2022** அன்று வெளியிடப்பட்டது.*

*அடுத்த நாளே, குஜராத்தின் பயங்கரவாத தடுப்புப் படையின் ஒரு குழு வழக்கறிஞர் தீஸ்தாவின் இல்லத்திற்குச் சென்று அவரைக் கைது செய்தது. அதற்குக் காரணமும் சொல்ல வில்லை, வாரண்டும் வழங்க வில்லை. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தீஸ்தா காவல் நிலையத்தில் புகார் அளிக்க விரும்பினார். ஆனால் அவர் அனுமதிக்கப்படவில்லை. எப்படியோ முயற்சி செய்து காவல் நிலையத்திற்குச் சென்று அங்கு ஊடகங்களிடம் உரத்த குரலில் குஜராத் பயங்கர வாத தடுப்புப்படை தன்னை புகார் அளிக்கவிட மறுப்பதை அறிவித்தார். பல இன்னல்களுக்கு இடையே இறுதியாக அவர் பல்வேறு அழுத்தங் களைக் கொடுத்தபிறகு மும்பாய் காவல் துறையினர் புகாரை ஏற்றுக்கொண்டு குஜராத் படையினர் மீது வழக்கு பதிவு செய்தது.*

*ஒரு குற்றமோ மரணமோ நிகழ்ந்திருந்தால் அதற்குரிய குற்றச் சாட்டுடன் சாட்சிகளின் பதிவையும் கொண்ட அறிக்கையை வைத்துக் கொண்டுதான் விசாரணை செய்யப்படும் நபரின் கைபேசியை கைப்பற்ற வேண்டும். ஆனால் அப்படி எதுவும் இல்லாமல் தீஸ்தாவின் வீட்டில் புகுந்து கைபேசி பிடுங்கப்பட்டது. அதன் பிறகு, அவர் அகமதாபாத் குற்றப்பிரிவு அலுவலகத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார். அங்கும் அதிகாரி யிடம் தான் சட்டத்திற்குப் புறம்பாக கைது செய்யப்படுவதாக வாய்மொழியாகப் புகார் செய்தார். தன்னை அதிகாரிகள் பிடித்துத்தள்ளி உடலளவில் துன்புறுத்தி தனது கைபேசியைப் பிடுங்கிக் கொண்டதாகப் புகார் அளித்தார். ஒவ்வொரு முறையும் காவல்துறை அதிகாரிகள், குற்றப்பிரிவு அதிகாரிகள், அரசுத்தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோரிடம் தன்மீது தொடுக்கப்படும் வழக்கு அரசியல் நோக்குடையது என தவறாமல் குறிப்பிட்டுள்ளார்.*

*பிறகு அவர் நீதிமன்றத்தில் கொண்டு செல்லப் பட்டு **5** நாட்கள் காவலில் இருக்க உத்தரவிடப் பட்டார். அன்றிலிருந்து எந்த குற்றமும் நிரூபிக்கப் படாமல் இரண்டரை மாத காலம் காவலில் வைக்கப்பட்டார். அவர் மீது குஜராத் காவல் துறையின் குற்றச்சாட்டு என்னவென்றால், ஆவணங்களைப் பொய்யாக ஜோடித்தது, பொய்சாட்சிகளை உருவாக்கி அரசியல் தலைவர்கள் மற்றும் அப்பாவிகளை **2002** குஜராத் படுகொலை வழக்கில் தொடர்புபடுத்தி சிறையில் தள்ள, வழக்கை திசைதிருப்ப முயற்சித்தது ஆகும். ஆனால் இவை எதுவும் அதுவரை நிரூபிக்கப் படவில்லை.*

*இறுதியாக உச்ச நீதிமன்ற நீதிபதி திரு லலித், நீதிபதிகள் எஸ் ரவீந்திரபட், சுதான் சுதூலியா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் அவருக்கு இடைக் கால ஜாமின் வழங்கியது. அத் தீர்ப்பில் அவர்கள் கூறியதாவது: "இடைக்கால ஜாமின் கோரிய மனுவின் மீதான தகுதியை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொண்டு நாங்கள் இவ்வழக்கை நடத்தி இருக்கிறோமேயன்றி, மேல் முறையீட்டாளரின் மனுவில் குறிப்பிட்டுள்ள அம்சங்களைப் பற்றிய தகுதி குறித்து எங்களின் கருத்தாக இத்தீர்ப்பை எடுத்துக்கொள்ளக் கூடாது. வழக்கின் முழு அம்சங்களையும் உயர்நீதிமன்றம் சுதந்திரமாக, எமது நீதிமன்ற கருத்துக்களால் சிறிதும் பாதிக்கப்படாமல் விசாரிக்க வேண்டும்". அதே சமயம், இடைக்கால ஜாமின் வழங்கித் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், குஜராத் படுகொலை **2002**ல் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று தனது வழக்கை நடத்திக் கொண்டிருக்கும் திருமதி தீஸ்தாவை ஜாமினிலிருந்து விடுவிப்பதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்த குஜராத் அரசாங்கத்தை நீதிபதிகள் பெஞ்ச் கடுமையாகச் சாடியது. கீழ்கண்ட கேள்விகளை குஜராத் அரசாங்கத்தின் முன் உச்ச நீதிமன்றம் எழுப்பியது.*

*முதலில், மனுதாரர் மீது எந்தக் குற்றப்பத்திரி கையும் சாற்றப்படாமல் இரண்டரை மாதம் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார். காலஞ்சென்ற நாடாளு மன்ற உறுப்பினரின் மனைவியின் மனுவை விசாரித்து, திரு நரேந்திர மோடி குற்றமற்றவர் என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த அடுத்த நாள்தான் முதல் தகவல் அறிக்கை (FIR) குஜராத் காவல் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. அதில், உச்ச நீதிமன்றம் கூறியதைத் தவிர புதிதாக எதுவும் இல்லை.*

*திருமதி தீஸ்தாவின் ஜாமின் கோரிய மனு மீது பதிலளிக்க குஜராத் உயர்நீதிமன்றம் **6** வாரங்கள் எடுத்துக் கொண்டுள்ளது. இது நீண்டகால ஒத்திவைப்பு ஆகும். திருமதி தீஸ்தாவின் மீதான குற்றச்சாட்டு கொலையோ அல்லது உடல் ரீதியாக பிறரைத் துன்புறுத்தியதோ போன்று கடுமையான குற்றமல்ல. அவர் மீது சாற்றப்பட்டிருக்கும் குற்றம், ஜாமினை மறுப்பதற்கான குற்றம் அல்ல.*

*விசாரணைக்காக சிறைக்குள் தள்ளப்பட்ட இந்த சமூகப் போராளியிடமிருந்து விசாரணை மூலம் எந்தத் தகவலையும் பெற இயலாமல் போனதற்கும் அதன் அடிப்படையில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வதில் தோல்வியுற்றதற்கும் குஜராத் காவல்துறையை உச்ச நீதிமன்றம் கேள்விக்கணையால் துளைத்தது. "இந்த வழக்கில், ஜாமின் மறுப்பதற்கு, யுஏபிஏ, பொடா (UAPA , POTA) போன்ற சட்டங்களின்படி கைது செய்தி ருப்பதாக சுட்டிக் காட்டப்படவில்லை. அவர் மீது சுமத்தியிருப்பது சாதாரண இந்திய தண்டனைச் சட்டத்தின்படியான குற்றம் உடல் ரீதியாக தாக்கியதாக குறிப்பிடவில்லை. நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ஆவணங்களைத் திருத்தியதாக, போலிகளை சமர்ப்பித்ததாகத்தான் கூறப் பட்டுள்ளது. அத்தகைய புகார்களில், சாதாரண மாக, ஒரு முதல்கட்ட விசாரணைக் கைதிற்குப்பிறகு, சிறையில் அடைத்துத்தான் விசாரிக்க வேண்டும் என்ற அளவிற்கு எதுவும் இல்லை. மேலும், ஒரு பெண் தனக்குச் சாதகமாக நடத்தப்பட வேண்டும் எனக் கேட்பதற்கு பிரிவு **437** நிச்சயமாக அனுமதிக்கிறது" என உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.*

*ஆக, தண்டனை அளித்தல் மற்றும் நீதிபரிபாலன அமைப்பின் மீதே சில அடிப்படைக் கேள்விகள் எழுகின்றன. சட்டத்தின் ஆட்சி என்ற பெயரில் ஒருவேளை அரசு பயங்கரவாதம் நடைமுறையில் இருக்கிறதா? நீதி விசாரணை அமைப்பு, நிர்வாகத்தின் செல்வாக்கிற்குக் கீழ், அதாவது, நிர்வாகிகள், அமைச்சர்கள் கீழ், வெறுமனே கண்காட்சி அமைப்பாகி விட்டதா? நீதித்துறை சுயாட்சியை மறுதலிக்கும் அளவிற்கு நிர்வாகம் படிப்படியாக அதிகாரத்தைத் தன் கையில் குவித்துக் கொள்கிறதா? அதிகாரத்தில் இருக்கும் கட்சியின் கைப்பாவையாக காவல்துறை மாறிவிட்டதா? சட்டத்திற்கு புறம்பாக காவல்துறை நடக்கமுடியுமா?*

*கருத்து மறுப்பு, மாற்றுக் கருத்து வெளிப்பாடு இவை எல்லாம் தேசத் துரோகமென கருதப் படுகிறதா? ஜனநாயக உரிமைகள் எனப் படுபவை வெறும் எழுத்தளவில்தான் நிலவுகிறதா? சமூக விரோதிகள் சில குடிமக்கள் மீதோ சமூகத்தினர் மீதோ தாக்கினால் அரசாங்கம் பொறுப்பேற்காதா? அமைச்சர்களும் அதிகாரிகளும் நீதிபதிகளும் அரசியல் தலைவர்களும், ஏன், ஆளும்கட்சித் தொண்டர்களும்கூட, சட்டத்திற்கு அப்பாற் பட்டவர்களா? காவல்துறை, நிர்வாகத்தின் ஆசீர்வாதம் இல்லாமல் கிரிமினல்களும் ரவுடிகளும் சாமானிய மக்களை நாட்கணக்கில் துன்புறுத்தமுடியுமா?*

*குஜாராத்தில் மட்டுமல்ல இந்தியாவில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை இதைத்தான் நாம் பார்க்கிறோம். கள்ளக்குறிச்சி விவகாரத்திலும் மக்கள் மனதில் தோன்றும் இதுபோன்ற கேள்வி களுக்கு பதில் இல்லை. ஜனநாயக எண்ணம் கொண்ட மக்கள் இவ்விசயத்தை ஆழ்ந்து சிந்தித்து அதற்குரிய மக்கள் இயக்கத்தை நடத்த முன்வர வேண்டும்* ■

## ஏஐகேஎஸ் விவசாய சங்கம் நாகப்பட்டினத்தில் நடத்திய மாநில மாநாட்டில் ஏஐகேகேஎம்எஸ்-ன் மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர் வாழ்த்துரை



# நாட்டின் ஜனாதிபதியாக திரௌபதி முர்மு தேர்வு செய்யப்பட்டிருப்பதன் பின்னணி

கீழ் ஜாதி, அதாவது தலித் வகுப்பைச் சேர்ந்த ராஜஸ்தான் மாநில ஜாலூர் மாவட்ட சுரானா கிராமத்தைச் சேர்ந்த 9 வயதுப் பள்ளி மாணவி இந்திரா மேக்வால் உயர் ஜாதி மாணவர்கள், ஆசிரியர்களுக்காக தனியாக வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பானையிலிருந்து நீர் அருந்திவிட்டாள். ஆத்திரமடைந்த உயர்சாதி ஆசிரியர் 'அக்குற்றத்துக்காக' அவளை ஈவிரக்கமற்று தாக்கியதால் அவள் படுகாயமுற்றுள்ளார் அப்பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஒவ்வொரு மருத்துத்துவமனையாக அவளைத் தூக்கிக் கொண்டு அலைந்து, எங்கும் சிகிச்சை அளிக்காததால் இறுதியில் அகமதாபாத் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். 75ஆவது இந்திய சுதந்திர நன்நாளுக்கு ஒரு நாள் முந்தைய தினம் ஆகஸ்ட்டு 14 அன்று அவள் இறந்துபோனாள்.

அதன் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து, அதாவது ஆகஸ்ட்டு 16 அன்று மாதாந்திர கல்விக் கட்டணம் ரூ250 செலுத்தவில்லை என்பதற்காக 13 வயதான உத்தரப்பிரதேசத்திலுள்ள பண்டிட் பிரம்மபுத்ரா மேல்நிலைப் பள்ளி மாணவன் ஒருவன் மேல்ஜாதி ஆசிரியர் ஒருவரால் தாக்கப்பட்டு உயிரிழந்துபோனான். பசு மாமிசம் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த இரண்டு பழங்குடியினர் பஜ்ரங்தள் குண்டர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுமட்டுமல்ல, மிகவும் பின்தங்கிய நிலையில், சராசரி மனிதனுக்கும் கீழாக வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் தலித்துக்கள், பழங்குடியினர் என்றழைக்கப்படுபவர்கள் துன்புறுத்தப்படுவதை, கொலை செய்யப்படுவதை, கூட்டு பலாத்காரம் செய்யப்படுவதை செய்தித் தாள்களில் அன்றாடம் பார்த்துக் கொண்டுதானிருக்கிறோம். சமூகப் பொருளாதார வாழ்க்கையில் தலித்துக்கள், பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்முறை படுமோசமான முறையில் ஈவிரக்கமற்று தொடர்ந்து கொண்டு தானிருக்கின்றது. என்னதான் ஏமாற்று வாதங்களை பாஜக அரசாங்கம் முன்வைத்தாலும் தலித்துக்கள், பழங்குடியினர் மீதான ஜாதிய பாகுபாட்டு காட்டுமிராண்டித்தனத்தை ஒதுக்கித்தள்ள முடியாது.

### தலித், பழங்குடியினர் என்பவர்கள் யார்?

இந்தியாவில் 'ஜாதிய முறை' என்ற சொல்லைக் கேட்டவுடன் அது சமூக, பொருளாதார, இனரீதியில் செயலற்றுப்போன ஒன்று எனவும் மத ரீதியிலான படிநிலை, பாகுபாடு இப்போது மறைந்து போய்விட்ட ஒன்று எனவும் பெரும்பாலும் எண்ணுகிறார்கள். ஆனால் இன்றும்கூட 'ஜாதிய முறை'யின் கீழ் கோடான கோடிப்பேர் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்பதை அவர்கள் உணரத் தவறுகிறார்கள். தலித் என்பவர்கள் இந்தியாவில் கீழ் ஜாதியினர் என வெகு காலத்துக்கு முன்னர் மட்டும் முத்திரை குத்தப்படவில்லை. இன்றும் அவர்கள் 'தீண்டத் தகாதகாதவர்கள்' என அழைக்கப்படுவதுதான் மிகவும் கொடுமையான நிலைமை. இவர்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, இந்துத்துவ ஜாதிய படிநிலையின் அடிமட்டத்தில் வைக்கப்பட்டு, சிலர் அவர்களைக் கறைபடிந்தவர்களாகப் பார்க்கின்றனர். இந்திய சமூகத்தில் தலித்துகள் பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக இருக்கும் அதே நேரத்தில், பழங்குடியின மக்கள் மனித நாகரிகத்தின் விளிம்பு நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்த இரண்டு பிரிவினரும் மேலோங்கியிருக்கும் இந்து சமூகத்தில் கீழ் நிலையில் வைக்கப்பட்டிருப்பதால், அவர்கள் இருவருமே ஒடுக்கப்பட்டும் அவமதிக்கப்பட்டும் வருகின்றனர்.

### தலித், பழங்குடியினர் இரு சாராருமே மனிதாபிமானமற்று நடத்தப்படுகின்றனர்

எப்படியோ சிரமப்பட்டு வாழ்வை நடத்திக் கொண்டிருக்கும் தலித் மற்றும் பழங்குடியினரை ஆளும் வர்க்கத்தின் ஆதரவு கொண்ட, உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் பாதுகாப்பு தந்து கொண்டிருக்கும் சமூக விரோதிகளால் அற்ப காரணங்களுக்காக படுகொலை செய்வது, அவர்களை உயிரோடு எரிப்பது, அவர்கள் உடமைகளைக் கொள்ளையடிப்பது மற்றும் சூறையாடுவது, பெண்களைக் கற்பழிப்பது கூட்டு கற்பழிப்புகள் செய்வது அதன் பின் அவர்களைக் கொலை செய்துவிடுவது போன்ற கொடூரக் குற்றங்கள் புரியப்படுகின்றன. சில தலித்துக்கள் குதிரையில் ஏறியமர்ந்து அதை ஓட்டிய 'குற்றத்துக்காக', மீசை வைத்திருந்த 'குற்றத்துக்காக', மேல் ஜாதியினர் அருகில் உட்கார்ந்த 'குற்றத்துக்காக' கொலை செய்யப்படுகிறார்கள். உயர் ஜாதியினர் தண்ணீர் எடுப்பதற்காக ஒதுக்கப்பட்ட கிணறுகளில் தலித் இனப் பெண்கள் தண்ணீர் எடுத்த 'குற்றத்துக்காகவும்' கொலை செய்யப்படுகிறார்கள். தலித் பெண்கள் தலித் அல்லாத பெண்களின் உடமைகள் எதையும் தொட்டுவிட்டால் அவர்கள் கடும் சொற்களால் அவமானப்படுத்தப்படுகிறார்கள், சில சமயங்களில் அடித்துத் துன்புறுத்தவும் படுகிறார்கள்.

கிராமத்து தேநீர்க் கடைகளில் தேனீர் அருந்த வேண்டுமானால், சாலையோர உணவுக் கூடங்களில் எதுவும் வாங்க வேண்டுமானால் தலித் பெண்கள் அவர்களது சொந்த டம்ளர்களை, பாத்திரங்களை எடுத்துச் செல்ல வேண்டும். இறந்த விலங்குகளின் தோலை உரிக்க எந்த தலித் குடும்பத்தினரும் மறுக்கக்கூடாது. அப்படி மறுத்தால் அப்பகுதி மேல்ஜாதியினரின், கிராமத்து தலைவரின் கடுங் கோபத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும். அப்படி விலங்குகளின் தோலை உரிக்கையில் பசுப் பாதுகாவலர்கள் கடுந்தாக்குதலுக்கும் ஆளாக வேண்டியிருக்கும்.

சமீபத்தில், நாட்டின் சட்டம் திருத்தப்பட்டு பழங்குடியினர் வாழ்ந்துகொண்டிருக்கும் வன நிலங்களை ஏகபோகவாதிகள் கையகப்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களை வெளியேற்றும் அவலம் அப்பட்டமாக அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. 2020ஆம் ஆண்டில் மட்டும் தலித்துக்களுக்கு எதிரான வன்முறை குற்ற வழக்குகள் 50,000க்கும் மேல் பதிவாகியிருக்கின்றன. ஆனால் தலித்துக்களுக்கு எதிரான அத்தகைய கொடுங் குற்றங்கள் புரிந்தவர்கள் எப்படியோ தண்டனையிலிருந்து தப்பி விடுகின்றனர். உண்மையில், தலித், பழங்குடியினர் என்பவர்கள் வறிய நிலையில் இருப்பதால், யதார்த்தத்தில் சமுதாயத்தின் பிரதான நீரோட்டத்திலிருந்து அந்நியப்படுத்தப்பட்டிருப்பதால், அவர்கள் அனைத்துவகையான துன்புறுத்தல், அவமரியாதை மற்றும் உடல் ரீதியான தாக்குதலுக்கு எளிதில் உட்படுத்தப்படுகின்றனர். ஒவ்வொரு நாளும் அப்பட்டமாக அவமானத்துக்கு உள்ளாக்கப்படும் தலித்துக்கள் ஓர் அச்சம் மிகுந்த சூழலிலேயே அனுதினமும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இது போலவே, பழங்குடியினர், அதாவது ஆதிவாசிகள் எனப்படுபவர்கள் பட்டியலின பழங்குடி (Scheduled Tribe) என சட்டரீதியிலான அங்கீகாரம் கொண்டிருந்தாலும், அவர்கள் நாடு முழுவதும் எண்ணற்ற வன்முறைகளுக்கும், அவல நிலைமைக்கும், பாகுபாடுகளுக்கும் இன்னும் ஆளாகிக்கொண்டிருக்கின்றனர். இவர்கள் சமூகத்தின் விளிம்பு நிலையில் இருப்பதால், இந்திய சமூக சமூகப் பொருளாதார செயல்முறைப் போக்குகளில் ஒவ்வொரு நாளும் திட்டமிட்ட வன்முறையை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். கடந்த 10 ஆண்டுகளில் (2011–2020) பட்டியலின பழங்குடி மக்களுக்கு எதிரான 76, 899 குற்றங்கள் பதிவாகியிருப்பதாக தேசியக் குற்றப் பதிவீட்டுத் துறை அறிக்கை (National Crime Record Bureau) கூறுகிறது. மத்திய பிரதேசத்தில் விபச்சாரக் கும்பல் பழங்குடியின மக்களை கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வருகின்றனர். மற்றொருபுரம், ஜார்க்கண்ட், சட்டிஸ்கர் மாநிலங்களில் மாவோயிஸ்ட்டுகள் எனப்படுபவர்களின் ஊடுருவலை தடுக்கிறோம் எனும் பெயரில் அங்கு வாழ்கின்ற பழங்குடியின மக்களை தொடர்ந்து பலியாக்கி வருகிறார்கள். 2019, மே மாதம் பழங்குடியின வகுப்பினப் பெண்கள் ஒவ்வொரு நாளும் துன்புறுத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்படுகின்றனர் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பழங்குடியினர் என பட்டியலிடப்படாதவர்களுக்கு சட்டபூர்வப் பாதுகாப்பு கிடைக்காதலால் அவர்கள் அதிக அளவில் இரையாகிறார்கள். இந்தியாவில் தலித்துக்கள் சமூக ரீதியில் மற்றும் சம்பிரதாய ரீதியில் மேல்ஜாதி வர்க்கத்தினரிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டிருகின்றனர். ஆனால் பழங்குடியின மக்கள் பெரும்பாலும் பிரதான நிலப் பகுதியிலிருந்து வெகுதூரத்தில் வசிப்பதால் உடல் ரீதியில் மற்றும் சமூக ரீதியில் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் தலித், பழங்குடியின மக்கள் இரு சாராருமே சம அளவில் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். அனைத்துவகை தாக்குதல்களுக்கும் அவர்கள் இலக்காக இருக்கின்றனர். மனிதனுக்கும் கீழாக அவர்கள் நடத்தப்படுகின்றனர்.

### பாஜக ஆட்சியில் தலித், பழங்குடியின மக்களுக்கு எதிரான குற்றங்கள் கணிசமாக அதிகரித்திருக்கின்றன

பிராமண சமூக வாதத்துக்கு ஆதரவை வெளிப்படையாக அளித்துவரும் தீவிர இந்து மதவாத பாஜக, ஆட்சியதிகாரத்தில் அமர்ந்தவுடனேயே திடீரென தலித் இனத்தவர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் வெடித்துக் கிளம்பின. ஆக, வெறி கொண்ட கும்பல் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை தாக்கும்போது, அது பெரும்பாலும் மதரீதியில் சிறுபான்மையாக இருக்கக்கூடிய மக்கள் மீதான வெறும் மத வெறுப்பின் அடிப்படையில் தான் நடக்கின்றது. செல்வாக்கு மிக்க உயர் ஜாதியினரின் ஜாதிய மனப்பான்மையின் அடிப்படையில் தான் அது அத்துமீறி, தலித் அல்லது பழங்குடி மக்கள் மீது நடத்தப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு தலித் குழந்தைகள் உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவம் பற்றிய பிரச்சினை எழுந்த போது, "இரண்டு நாய்க்குட்டிகள் இறந்ததற்கு இப்படிக் கூச்சலிட என்ன இருக்கிறது" என முன்னாள் பாஜக பாதுகாப்பு அமைச்சர், ஓய்வு பெற்ற விகே சிங் என்பவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு சமயத்திலும் நீதி மறுக்கப்பட்டு வருகையில் நிராதரவான தலித்துக்களும் பழங்குடியின மக்களும் இப்படித்தான் சமுதாயத்தின்முன் கேள்வியெழுப்புகிறார்கள்: "பிறரைப்போல நாங்களும் மனிதர்களில்லையா? எங்கள் ரத்த நாளங்களில் ஓடிக்கொண்டிருப்பது அதே

தொடர்ச்சி 4ம் பக்கம்

# புதுச்சேரி மாநில அரசாங்கம் மின்சாரத் துறையை தனியார்மயமாக்கும் முடிவைக் கண்டித்து வேலைநிறுத்தம்



வேலைநிறுத்தத்தை ஆதரித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர் தோழர் லெனின்துரை உரை

புதுச்சேரி மாநிலம் அரசாங்கம், மின்சார துறையை தனியார்மயமாக்கும் முடிவை கண்டித்தும் உடனடியாகத் திரும்பப்பெற வேண்டும் என மின்சாரத் துறையினர் செப்டம்பர் 27முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மின்சார ஊழியர்கள் போராட்டத்தை ஆதரித்து எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) மாநில செயலாளர் சா லெனின் துரை, ஏஐயுடியுசி மாநில தலைவர் பு சங்கரன் ஆகியோர் உரையாற்றினர். கூட்டத்தில் தோழர்கள் கலந்து கொண்டனர். போராட்டத்தை ஒடுக்க துணை இராணுவம் வரவழைக்கப்பட்டது.

மின்சார ஊழியர்கள் சங்கம் போராட்டத்தின் விளைவாக மின்சார துறை அமைச்சர் தலையிட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென? உத்தரவாதம் அளித்ததால் தீபாவளி பண்டிகை வரை போராட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இது ஊழியர்களின் போராட்டத்திற்கும் பொதுமக்கள் ஒற்றுமைக்கும் கிடைத்த வெற்றியாகும் ■

## நாட்டின் ஜனாதிபதியாக . . .

# துன்பப்படும் தலித், பழங்குடி மக்களை ஏமாற்ற பாஜக தந்திர வலை விரிக்கிறது

3ம் பக்கத் தொடர்ச்சி

ரத்தமில்லையா? துன்புறுத்தப்படவும் பாகுபடுத்தப் படவும் தொடர்ந்து இன்னல்களுக்கு உள்ளாகவும் தான் நாங்கள் பிறந்தோமா? பலம் படைத்தோர் மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் சமூக ரீதியில் ஒதுக்கி வைக்கப்படவும் தான் நாங்கள் பிறந்தோமா?"

தலித்துக்களுக்கு எதிராக நடக்கும் அட்டூழியங் களை ஒப்பிடுகையில் பழங்குடி மக்கள் மீது நடத்தப்படும் அட்டூழியங்கள் சற்றும் குறைந்ததல்ல. பெரும்பான்மை இந்தியர்கள் பழங்குடி இனப் பெண்களை 'மனிதனுக்கும் கீழானவர்கள்' எனக் கருதுவதால் அவர்கள்தான் அதிகம் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர். கடந்த ஜூன் மாதம் சத்தீஸ்கர் மாநில இளம்பருவ பழங்குடியின பெண் ஒருவர் பாதுகாப்புப் படையினரால் திட்ட மிட்டு நடத்தப்பட்ட என்கவுண்டரில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுப் படுகொலை செய்யப் பட்டிருக்கிறாள் என்று கூறப்படுகிறது. ஊடகச் செய்திகளின்படி, பாஜக ஆட்சியில் பழங்குடி மக்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

### தலித், பழங்குடி மக்கள் மீது இத்தகைய துன்புறுத்தல்கள், அவமானங்கள் ஏன் தொடர்ந்துகொண்டிருக்கிறது ?

யதார்த்தத்தில் மிக ஏழ்மையாக இருக்கின்ற, தாழ்த்தப்பட்ட, அடிமட்டத்திலிருக்கும் மக்களின் பிரிக்கமுடியா அங்கமாக இருக்கின்ற தலித் மற்றும் பழங்குடி மக்களுக்கு எதிரான இத்தகைய அட்டூழியங்கள், குற்றங்கள் ஏன் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன என்பதே வெளிப்படையான கேள்வி. ஆளும் கட்சியால், அதன் அரசாங்கத்தால் 'தேசியவாதமும் தேசப்பற்றும்' பேசப்பட்டு 75வது சுதந்திர தினம் படுவிமரிசையாக கொண்டாடத் துடன் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கையில், தலித், பழங்குடியினர் மற்றும் பாடுபடும் வெகுஜனங் களின் பிற பிரிவினர் படுகின்ற இத்தகைய மோசமான வறுமையை, பாகுபாட்டை மற்றும் ஒடுக்கு முறையை இந்நாடு பார்த்துக் கொண்டி ருக்கிறது. இது அதி வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது. இத்தகைய மனிதாபிமான மற்ற செயல்களின் காரணத்தை ஆழமாக ஆராய்ந்தோமானால், அத்தகைய கேடுகெட்ட செயல்களின், தீமைகளின், துயரங்களின் மற்றும் பிறழ்வுகள் ஊற்றுக்கண் நாம் வாழும் சமுதாய அமைப்பான காலாவதியாகிப்போன, முற்றிலும் ஊழல் மிகுந்த மற்றும் நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ அமைப்புதான் என்பது தெரியவரும். ஆளுகின்ற முதலாளித் துவத்தின் சந்தை நெருக்கடி அதிகரிக்க அதிகரிக்க, அனைத்து அம்சங்களிலும் ஒடுக்கப்படும் மக்கள் மீதான தாக்குதல் என்பது இன்னும் அப்பட்டமாக வெளிப்படும். தலித் மற்றும் பழங்குடி மக்களின் சொல்லவொண்ணா வறுமையையும் துயரமும் கூட அதன் ஒரு அங்கமே.

### துன்பப்படுத்தப்படும் தலித், பழங்குடி மக்களை ஏமாற்ற பாஜக தந்திர வலை விரிக்கிறது

நாட்டின் ஆளும் ஏகபோகவாதிகளின் விசுவாச மான சேவகனாக பாஜக தலைமை, இந்த அப்பட்டமான உண்மையை நன்கு அறியும். தலித் மற்றும் பழங்குடி இன மக்களுக்கும் பிற ஒடுக்கப் படும் மக்களுக்கும் இவ்வுண்மை தெரிய வருகையில், ஆளும் வர்க்கம் தந்திரமான வகையில் ஒரு சிறு பிரிவினருக்கு தகுதியற்ற பதவியை, பணத்தைத் தந்து, அவர்களை ஈர்க்கப் பார்க்கிறது என்பதை நாம் காண்கிறோம். அவ்வாறான தலித், பழங்குடி யின மக்களை சேர்ந்த, ஆளும் வர்க்கத்தின் சலுகை களை செல்வாக்கை அனுபவித்துவரும் கிரிமி லேயர் எனப்படும், பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் அங்கமாக இருக்கக்கூடிய, பின்தங்கிய மற்றும் அவர்கள் சமுதாயத்தின் வேகமாகச் சீரழிந்துவரும் வாழ்வாதாரத்தைப்பற்றி பாராமுகமாக இருக்கின்ற வெறும்3% மேல்தட்டு மக்கள் உருவாகியிருக்கின்றனர்.

இவ்வாறாக, அடக்குமுறை முதலாளித்து வத்தின் பிற அடிவருடிகளைப் போலவே ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் சலுகைகளை அனுபவித்துக்கொண்டு அவர்களின் ஆதரவாளர் களாக ஆகியிருக்கும் இவர்கள் அனைத்துவகை சட்டவிரோத, ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். தந்திரமான முறையில் ஆளும் வர்க்கமானது வெகுஜனங்களின் மிகவும் ஒடுக்கப்பட்ட இந்த பிரிவினரின் ஒரு சாராரைத் தேர்ந்தெடுத்து, அதன் வர்க்க நலனுக்கு சேவை புரிபவர்களாக ஆக்கி, அதன் மூலம் தலித் மற்றும் பழங்குடி சமூகம் எப்படி முன்னேறியுள்ளது பாருங்கள் எனும் பொய்யான பிம்பத்தை உருவாக்க முயலுகிறார்கள். மரணத் தருவாயில் இருக்கும் முதலாளித்துவத்தில் வர்க்கப் பிளவு என்பது ஒவ்வொரு கணமும் கூர்மையடைந்து கொண்டி ருக்கையில், இருப்போருக்கும் இல்லாதோருக்கும் இடையேயான மிகப்பெரும் இடைவெளி சமூக அமைப்பின் அனைத்து மட்டத்திலும் மேலும் அப்பட்டமாக வெளிப்படுகிறது. இந்த யதார்த்த உண்மைக்கான சாட்சி, தலித் மற்றும் பழங்குடி மக்களிடையே இத்தகைய சலுகைகளை அனுபவிக்கும் பிரிவினர் உருவாகியிருப்பதிலிருந்து தெரியவரும்.

இப்பின்னணியில், மக்களை ஏமாற்ற, பாஜக பல்வேறு தந்திரங்களை கையாளுகிறது. நாட்டின் ஜனாதிபதி பதவி உள்ளிட்ட சில முக்கிய பதவி களுக்கு தலித் மற்றும் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த சிலரை தேர்ந்தெடுத்திருப்பதும் அத்தகைய தந்திரங்களில் ஒன்றே. இவ்வாறு செய்வதின் மூலம் தலித் மற்றும் பழங்குடி சமூகம் சமுதாயத்தின் பிரதான நீரோட்டத்தில் எப்படி முன்னேறி, ஜொலிக்கிறார்கள் பாருங்கள் என மக்கள் முன் காட்ட அவர்கள் விரும்புகின்றனர். இதே நோக்கத்தில்தான் 2017இல் தலித் குடும்பத்தைச் சேர்ந்த ராம்நாத் கோவிந்த் ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டார். இப்போது பிறப்பால் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த திரௌபதி முர்மு நாட்டின் 14வது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

வழக்கம் போலவே, முதலாளித்துவ ஊடகங்கள் 140 கோடி மக்கட் தொகை கொண்ட ஒரு நாட்டின் மிக உயர்ந்த பதவியை ஒரு பழங்குடி இனத்தவர் வகிக்கிறார் என ஆரவாரம் செய்தன. கல்வியிலும் பிற செயல்பாடுகளிலும் அவர் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார் என்பதையும் சமூக ஊடகங்கள் வரிக்கு வரி அதற்கான தரவுகளையும் வெளியிட்டன. தலித் மற்றும் பழங்குடியினர் உயர் பதவிகளில் அமரும் அளவுக்கு முன்னேறியிருக் கிறார்கள் என ஏமாற்றும் ஆளும் கட்சிகளின் நடவடிக்கைகளை ஏகபோகங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஊடகங்கள் அலங்கார வார்த்தைகளில் வர்ணிப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்று மில்லை. ஆக, இம் 'மிகப்பெரும்' நாட்டின் 'மிகப்பெரும்' ஜனநாயகத்தை கொண்டாடிக் கொண்டு திரௌபதி முர்மு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், தலித்துக்களும் பழங்குடியினரும் இனி கண்ணியமாக வாழ்வார் கள் என்பதாக சொல்லப்படுகிறது. அவர்களுக்கு மகிழ்ச்சியான நாட்கள் வந்துவிட்டதாக கூறப்படு கிறது. இதைவிட பெரிய ஏமாற்று வேறென்னவாக இருக்க முடியும்?

### ராம்நாத் கோவிந்தோ அல்லது முர்முவோ தலித், பழங்குடியினருக்கு எதிராக நடக்கும் குற்றங்களுக்கு குரல் கொடுத்ததில்லை

1998 முதல் 2002 வரை பாஜக தலித் முன்னணியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இருந்ததையும் மேலும் அக்கட்சியின் தேசிய செய்தித் தொடர்பாளராக இருந்ததையும் இங்கே குறிப்பிடுவது மிக அவசியம். அவர் தனது முன்னோரின் இல்லத்தை ஆர்எஸ்எஸ் க்கு தானமாக அளித்தார். பாஜக வேட்பாளராக இரு முறை ராஜ்யசபா உறுப்பினராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் அவர் பீகார் கவர்னராகவும் பணியாற்றியிருக்கிறார். ஆனால் டில்லி, உத்திரப்பிரதேசத்திலுள்ள உன்னாவோ, ஹத்ராஸ், சித்ரகூட் ஆகிய இடங்களில் தலித் பெண்கள் கொடூரமாக பாலியல் பலாத்காரம் செய்து படுகொலை செய்யப்பட்டபோதும், ஹிஸார் மாவட்டம் மிர்க்கான் கிராமத்தில் ஒரு தலித்தும் அவரது இரண்டு மருமகன்களும் மேல் ஜாதியினரைச் சேர்ந்த 17 நபர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டபோதும், திருடினார் என்ற சந்தேகத்தின் பெயரில் 8 பேர் அடங்கிய குடும்பத்தில் சம்பாதிக்கும் ஒரே நபராக இருந்த 30 வயது தலித் இளைஞர் 11 பேர்கொண்ட கும்பலால் படுகொலை செய்யப்பட்டபோதும் அவற்றைக் கண்டித்து அவர் வாய் திறக்கவில்லை. அவரது தலித் இன மனசாட்சி என்னவானது ?

திரௌபதி முர்முவும்கூட ஜார்கண்ட் மாநில கேபினட் உறுப்பினராக இருந்துள்ளார். பழங்குடியின மக்களின் பிரிக்க முடியாத வனப் பகுதியிலிருந்து அவர்களை வெளியேற்று வதற்கான சட்டம் ஒன்று அவர் அமைச்சராக இருந்தபோதுதான் ஜார்கண்ட் மாநில சட்ட சபையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அதை திரௌபதி முர்மு அப்போது எதிர்க்கவே இல்லை. குஜராத்தின் கிர்சோமநாத் மாவட்டத்தைச் சேர்ந்த உனா நகரத்தில் பசு பாதுகாவலர்கள் என தங்களை அறிவித்துக் கொண்ட ஒரு கும்பல் 4 தலித் இளைஞர்களை மிருகத்தனமாகத் தாக்கிய சம்பவத்தை ராம்நாத் கோவிந்தோ அல்லது முர்முவோ கண்டிக்கவும் இல்லை.

கர்நாடக மாநில சாந்திபுரா கிராமத்தில் பசுவைத் திருடிக் கொன்றுவிட்டனர் எனக் குற்றம் சாட்டப்பட்டு ஆயுதமேந்திய பஜ்ரங்தள் அமைப்பின் உறுப்பினர்கள் 5 தலித்துக்களை கடுமையாகத் தாக்கியபோதும் திரௌபதி முர்மு அமைதி காத்தார். பாஜக மாணவர் பிரிவான ஏபிவிபியின் அப்பகுதி அமைப்பு அளித்த புகாரின் அடிப்படையில் ஹைதராபாத் பல்கலைக் கழகத்தில் பிஹெச்டி படித்துவந்த புத்தி கூர்மைகொண்ட தலித் மாணவரான ரோகித் வெமுலா நியாயமற்ற முறையில் இடை நீக்கம் செய்யப்பட்டபோதும் அதன் பின் அவர் தற்கொலை செய்துகொண்டபோதும் இதை எதிர்த்து ராம்நாத் கோவிந்தோ அல்லது முர்முவோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. வேதனையுடன் எழுதப்பட்ட, சமூக பாகுபாட்டின் வெளிப்பாடாக வந்த குற்றச் சாட்டாக ரோஹித் வெமுலாவின் கடிதம் பொது வெளியில் வந்தபோதும் இவர்கள் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

ஒரு வாரத்துக்கு முன்பாக, உத்திரப் பிரதேச மாநிலத்தின் பிலிபிட் எனுமிடத்தில் மற்றொரு இளம்பருவ மைனர் தலித் பெண் இரு மனிதர்களால் கூட்டு பலாத்காரம் செய்யப்பட்டு தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளார். அவரது நிலைமை இப்போது மோசமாக உள்ளது. இது பற்றி ராம்நாத் கோவிந்திடமிருந்தோ அல்லது முர்முவிடமிருந்தோ எந்த எதிர்வினையும் எழும்பவில்லை. இச் சம்பவம் நடந்த 3 மணி நேரத்துக்குப் பின்னர் திரௌபதி முர்மு நாட்டின் ஜனாதிபதியாக உறுதிமொழி எடுத்துக்கொண்டார். கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் முதல் பிரதம மந்திரி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை பார்த்தவர்களுக்கு சம்பளப் பட்டுவாடா செய்யாததால் பெரும்பாலும் பழங்குடி இனத்தைச் சார்ந்த மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சார்ந்த நூற்றுக்கணக்கான பெண்கள் கடும் வேதனையில் வீதியில் இறங்கிப் போராடினர். 2022 மார்ச் மாதத்தில் பாஜக ஆளுகின்ற மத்திய பிரதேச மாநிலத்தின் அலிராஜ்பூர் மாவட்டத்தில் ஒரு பழங்குடி இனப் பெண் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதற்காக 2 பேர் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் (கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989 என்பது பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் மீது தொடுக்கப்படும் குற்றங்களை தடுப்பதற்கான மிகவும் முக்கியமான ஒரு சட்டமாக்க கருதப்படுகிறது. அச் சட்டத்தில் பல குற்றத்தடுப்பு விதிகள் இருந்தபோதிலும், இச் சமூகத்துக்கு எதிரான குற்றங்களும் அட்டூழியங் களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. குற்றம் புரிந்தவர்கள் பெரும்பாலும் தப்பிவிடுகின்றனர். ஒரு சிலரே தண்டனை அடைகின்றனர். அத்தகைய

தொடர்ச்சி 5ம் பக்கம்

## நாட்டின் ஜனாதிபதியாக . . .

# வர்க்கப் போராட்டத்திற்கு குரலெழுப்புவதுதான் ஒடுக்கப்படும் மக்கள் விடுதலைக்குத் தீர்வு

4ம் பக்கத் தொடர்ச்சி

குற்றங்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதால், பழங்குடி மக்கள் நாகரிக சமுதாயத்தை விட்டுத் தனிமைப்பட்டு நிற்கின்றனர்.

ஆக, ராம்நாத் கோவிந்த் அல்லது முர்மு போன்றவர்கள் நாட்டின் உயர் பதவிகளில் இருப்பதால், கீழ் மட்டத்தில் வாழும் தலித் மற்றும் பழங்குடி மக்களின் நலன்களுக்கு எப்படி உதவ முடியும்? தெளிவாக, ஆளும் முதலாளித்துவத்தின் வர்க்க நலன்களுக்காகச் சேவை செய்யும் முதலாளித்துவ அரசியல்வாதிகள் உண்மையில் தலித், பழங்குடி மக்கள் உயர் பதவிகளில் இருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு அதை அடிமட்டத்தில் வாழும் தலித், பழங்குடி வெகுஜனங்களையும் பிற பாடுபடும் மக்களையும் ஏமாற்றும் தந்திரமாக வைத்திருக்கின்றனர்.

### வர்க்கப் போராட்டத்துக்கான குரலெழுப்புவதுதான் தலித், பழங்குடி மக்கள் பிரச்சினைகளுக்கான தீர்வாக இருக்கும், வகுப்புவாத மோதல்கள் தீர்வல்ல

சமூக வரலாற்றுக்கு காரணங்களால் நம் நாட்டின் சீரழிந்த சாகும் தருவாயிலிருக்கும் முதலாளித்துவத்தில் சமுதாயத்தை ஜனநாயகப் படுத்துதல் அரைகுறையாக விடப்பட்டு இருப்பதால், காலாவதியாகிப் போன ஜாதிய அமைப்பு முறை அப்படியே இருந்து கொண்டிருப்பது மட்டுமில்லாமல், அனைத்து பாராளுமன்றக் கட்சிகளும் அதனை அவைகளின் ஓட்டு வங்கியை பலப்படுத்திக்கொள்ள இன்னும் அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. அனைத்து அம்சங்களிலும் அதிகரித்துவரும் சமூக கலாச்சாரச் சீரழிவால் மற்றும் கிரிமினல் பாராளுமன்ற அரசியலால் குற்றம், வன்முறை, பாலியல் பலாத்காரம், கூட்டு பாலியல், பாகுபாடு மற்றும் அவர்களுக்கு எதிரான அநீதி மற்றும் தலித், பழங்குடியின மக்களை மோசமாக நடத்துவது யாவும் சமூக கலாச்சார அம்சங்களில் உண்மையில் பிரதிபலிக்கின்றது. ஆக, நல்ல வாழ்க்கைக்கான அவர்களின் கனவு நிறைவேறாமலே இருக்கின்றது. நடந்து கொண்டிருக்கும் துன்புறுத்தல்கள், பாகுபாடுகளிலிருந்து தலித், பழங்குடியின மக்கள் விடுதலை பெறுவது வெறும் கனவாகவே இருக்கின்றது.

ஆக, முதலாளித்துவ அரசியல்வாதிகளும் போலி மார்க்சியவாதிகளும் தலித் மற்றும் பழங்குடியினர் நலன் எனப் பேசிக்கொண்டு, தலித் மற்றும் பழங்குடியினர் நலனுக்காகப் போராட்டம் நடத்துகிறோம் எனக் கூறிக்கொண்டு முதலாளித்துவ வாக்கு வங்கி அரசியலில் முற்றிலுமாக மூழ்கிவிட்டனர். அவர்களின் நோக்கம் வாக்கு அரசியல் பலன்களை அறுவடை செய்வதுதானாகும். அதனால் அவர்கள் அத்தகைய போராட்டங்களை முதலாளித்துவப் பாராளுமன்றவாத எல்லைக்குள்ளேயே சுருக்கிக்கொள்கின்றனர். துரதிஷ்டவசம் என்னவென்றால், சுரண்டப்படும் மக்கள் முதலாளித்துவச் சுரண்டலிலிருந்து இறுதி விடுதலை பெறுவதற்கு தேவையான ஒரே வழியாக இருக்கக்கூடிய பலம் வாய்ந்த ஜனநாயக இயக்கம் இல்லாத ஒரு சூழலால், இத்தகைய நயவஞ்சகத் திட்டமானது அவர்களுக்கு நல்ல பலனைத் தருகிறது. ஒடுக்கப்படும் மக்களின் தேவையான ஜனநாயக இயக்கங்கள் பலவீனமாக இருப்பதால், அல்லது இல்லாமலிருப்பதால், ஆளும் முதலாளித்துவ வர்க்க முகாமின் வசதி படைத்த, சலுகை பெற்றுக்கொண்டிருக்கும் உயர் வகுப்பைச் சேர்ந்த ஒரு கணிசமான பிரிவினர் வெறுக்கத்தக்க இந்த ஜாதிய அமைப்பு முறையைப் பயன்படுத்திக்கொண்டு தலித், பழங்குடியினர் போன்ற சுரண்டப்படும் மக்களுடன் இணைந்து சென்றுகொண்டிருக்கின்றனர்.

ஆக, பல சமயங்களில், பல இடங்களில் ஆட்சி பீடத்தில் அமர்வதற்காக தலித், பழங்குடியினர் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருக்கும் அப்பட்டமான குட்டி முதலாளித்துவக் கட்சிகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. அவை தலித் மற்றும் பழங்குடியின மக்களின் வறிய, அவல நிலையை பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. ஆட்சிக்கு வந்த பின்னர், அவை தங்கள் உண்மை முகத்தை காட்டிவிடுகின்றன. வசதி படைத்தோர், முதலாளித்துவவாதிகளுக்கு பேரார்வத்துடன் சேவை செய்துகொண்டு, ஒரு சமயம் அவர்கள் முதலைக் கண்ணீர் வடித்த தலித்துக்கள், பழங்குடியினர் உள்ளிட்ட எவரையும் விட்டு வைக்காமல் அடக்குமுறை முதலாளித்துவ எந்திரத்தின் பங்கும் பகுதியாக அவை மாறிவிடுகின்றன.

ஆளும் முதலாளித்துவம் அதன் வர்க்க நலன்களுக்காக திரைமறைவிலிருந்து பெரும்பாலும் வளர்த்துக் கொண்டிருக்கும், தலித்துக்களுக்கு ஆதரவாக, பழங்குடியினருக்கு ஆதரவாக இருக்கிறோம் எனப் பேசிக்கொண்டிருக்கும் அமைப்புகளின் சூழ்ச்சிகளுக்கு ஒடுக்கப்படும் மக்களான தலித், பழங்குடியினர் பலியாகிவிடக் கூடாது. அனைத்து ஒடுக்கப்படும் மக்களின் நலன்களுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்து இருக்கின்ற அவர்கள் நலனுக்கு இவ்வாறான தலித் அமைப்புகள், ஜாதிய கட்சிகள் மற்றும் தங்களை பழங்குடியினரின் கட்சி என அழைத்துக் கொள்பவை பெரும்பாலும் துரோகமிழைத் திருப்பதை அவர்களின் கடந்தகால அனுபவம் சொல்லும். தலித், பழங்குடியினத் தலைவர்கள் நன்கறியப்பட்ட உயர்சாதிக் கட்சிகளுடன் ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டு, பிற முதலாளித்துவத் தலைவர்கள் போலவே கொள்ளையடித்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா? தலித், பழங்குடியின அமைப்புகளின் தலைவர்கள் என அழைத்துக் கொள்ளும் சிலர் பிரதான முதலாளித்துவக் கட்சிகளின் கூட்டணியுடன் அல்லது ஆதரவுடன் சட்டமன்றத் தலைவர்களாக, பாராளுமன்றத் தலைவர்களாக, அமைச்சர்களாக, ஏன் முதலமைச்சராகவும் ஆகவில்லையா?

தலித், பழங்குடியினர் வாக்காளர்களை ஈர்ப்பதற்காக தங்களை தலித், பழங்குடியினர் என வழக்கமாக அடையாளப்படுத்திக்கொள்ளும் அத்தகைய அரசியல்வாதிகளில் பலர் சொத்துக்களைக் குவித்துக்கொண்டு, தங்கள் செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ள அனைத்து வகையான மோசமான செயல்பாடுகளில் ஈடுபடுவதையும், ஆட்சிக்கு வர அனைத்து மோசமான வழிகளையும் கையாண்டு கொண்டிருப்பதை நாம் பார்க்கவில்லையா? அவ்வாறு சட்டசபைகளுக்கு மற்றும் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லது நாட்டின் ஜனாதிபதியாக நியமனம் செய்யப்பட்டவர்கள் தலித் மற்றும் பழங்குடியினர் சமுதாயம் படும் பெரும் அல்லல்களுக்கு ஏதாவது தீர்வு கண்டிருக்கின்றனரா? இந்து மதவாதத்தின் பிடியிலிருந்து விலகி சில தலித்துகள்கூட ஒரு புதிய அடையாளத்தை வேண்டி புத்த மதத்தைத் தழுவியுள்ளனர். அது அவர்கள் வறுமையை, துயரத்தைத் துடைத்து விட்டதா? கடந்த காலத்திலும்கூட (விவேகானந்தரே குறிப்பிட்டு இருப்பதுபோல்) ஜாதிய அடிப்படையிலான இந்து சமுதாயத்தின் ஒடுக்குமுறையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள பல தலித் இனத்தவர் கிருஸ்தவ மற்றும் முஸ்லீம் மதங்களை நோக்கிச் சென்றனர். அது அவர்கள் துயரத்தைப் போக்கியதா?

பாஜகவின் தத்துவார்த்த தலைமையாக இருக்கக்கூடிய ஆர்எஸ்எஸ் அமைப்பு இந்தியாவின் மத்திய மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் பழங்குடியினர் சமுதாயத்தை இந்துமயமாக்கும் செயல்பாடுகள் ஈடுபட்டு வருகின்றது. வழக்கமாக ஆர்எஸ்எஸ் அமைப்பு சிறு வர்த்தக சமூகத்தை 'வாணாச்சல்' என்ற பெயரில் திரட்டி, மதம் மாறிய பழங்குடியினர் சமூகத்தை கிருஸ்தவ பழங்குடியினருக்கு எதிராகத் திருப்பி விடுகின்றனர். இவ்வாறாக, ஆர்எஸ்எஸ் ஆதரவு பெற்ற பழங்குடியினர் நல அமைப்புகள் உருவாக்கப் பட்டிருப்பது அவர்கள் பிரச்சினைகளை மதரீதியில் கொண்டு சென்று, பாஜக அதன் ஓட்டு வாங்கிய பலப்படுத்திக்கொள்ள உறுதுணையாக ஆகிவிட்டதெனக் கூறப்படுகிறது. இத்தகைய போக்கு இந்தியாவின் கிழக்கே நாகலாந்து மற்றும் அஸ்ஸாம் வரையிலும் காணப்படுகிறது. இத்தகைய கேள்விகள்தான் ஒடுக்கப்படும் தலித் மற்றும் பழங்குடியின சகோதரர்கள் மற்றும் நேர்மையாகச் சிந்திக்கும் அனுதாபிகள் அவர்களின் நலன் குறித்து ஆழமாகச் சிந்திக்க வேண்டியவையாக உள்ளன.

### புரட்சியின் மூலம் முதலாளித்துவத்தை தூக்கியெறிவதில்தான் விடுதலை அடங்கியிருக்கிறது

அப்பட்டமாகத் தெரிகின்ற மேல் வகுப்பினரின் சுரண்டல் என்பது உண்மையில் இந்திய சமூகத்தில் காணப்படுகின்ற ஈவிரக்கமற்ற முதலாளித்துவச் சுரண்டலின் ஒரு வெளிப்பாடுதான் என்பதை ஒடுக்கப்படும் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். சகோதரத்துவ ரத்தக் களறியை, பரஸ்பர மோதலை ஏற்படுத்தும் நோக்கத்தில் ஒரு ஜாதியினரை இன்னொரு ஜாதியினருடன் மோதவைப்பது ஒடுக்குமுறை முதலாளித்துவத்தை அப்படியே தக்கவைத்துக் கொள்வதற்கும் முடிந்தவரை தவிர்க்கவியலாத முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சியை தள்ளிப்போடுவதற்குமே சாதகமாக இருக்கும் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.


சுரண்டும் மற்றும் சுரண்டப்படும் இரண்டு வர்க்கங்களுக்கு இடையேதான் உண்மையில் பிளவு இருக்கிறது, ஜாதிய, மத அல்லது இனங்களுக்கு இடையே அல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, ஜாதி, மதம், இனம், பிராந்தியம் ஆகியவற்றைக் கடந்த, ஒடுக்கப்படும் கோடானுகோடி மக்கள் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்த வர்க்கப் போராட்டத்தை சரியான புரட்சிகர சித்தாந்தத்தின் அடிப்படையில், உயர்ந்து பாட்டாளிவர்க்க கலாச்சார அறநெறியின் அடிப்படையில் மற்றும் சரியான புரட்சிகரத் தலைமையின் கீழ் தீவிரப்படுத்துவதுதான் இப்போது தேவை. அப்போது மட்டும்தான் தலித்துக்கள் உள்ளிட்ட அனைத்து ஒடுக்கப்படும் மக்களுக்கு முதலாளித்துவ ஒடுக்குமுறையின் பிடியிலிருந்து விடுதலைக்கான பாதை அமையும்.

அத்தகைய இயக்கம் சரியான புரட்சிகரத் தலைமையின்கீழ் எழுச்சி பெற்று, கொழுந்துவிட்டு எரியுமானால், தலித் மற்றும் பழங்குடியின மக்கள் உள்ளிட்ட சுரண்டப்படும் மக்கள் விழிப்புணர்வு பெற்று பின்னர் அவர்களைத் தவறாக வழி நடத்தும் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் தந்திரங்களை அவர்கள் புரிந்துகொள்வார்கள்.

தலித் மற்றும் பழங்குடியினர் அடையாளத்துடன் அரசாங்க முக்கிய பதவிகளில் இருக்கின்றவர்கள் தலித் மற்றும் பழங்குடியின மக்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்ல என்பதையும், அவர்கள் விரும்பினாலும்கூட தலித், பழங்குடியின மக்களின் நலன்களுக்கு கொஞ்சம்கூட சேவை செய்ய இயலாது என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

எனவே, ராம்நாத் கோவிந்தோ அல்லது திரௌபதி முர்முவோ நாட்டின் ஜனாதிபதியாக இருக்கலாம், ஆனால் அது தலித்,பழங்குடியினர் மற்றும் தாழ்ந்த ஜாதியினர் என அழைக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் துயரங்களை மாற்ற முடியாது ■

## மத்திய அரசாங்கத்தின் தேசியக் கல்விக் கொள்கை 2020க்கு ஏஐடிஎஸ்ஓ எதிர்ப்பு




செப்டம்பர் 28,2022 – சென்னையில் நடைபெற்ற பேரணி

## புரட்சிகர கட்சியாகிய . . .

# எல்லா காலத்திலும் மாபெரும் மனிதர்கள் யாவரும் சமூக நீரோட்டத்திற்கு எதிராகத்தான் போராடினர்

*1ம் பக்கத் தொடர்ச்சி*

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது அவர்களிடம் இந்தத் திறன் மிகவும் போதாமையாக இருக்கிறது. இதுதான் பிரதான பலகீனமாகும். தக்க தருணத்தில் சரியான தன்னார்வத்துடன் இந்த பலகீனம் நீக்கப்பட்டாலே *75%* பிரச்சினைகள் தீர்ந்துவிடும்.

வெறுமனே படிப்பு வகுப்புகளை நடத்திக் கொண்டிருப்பதால் அரசியல் மற்றும் ஸ்தாபன தலைமையை வழங்கும் திறனுள்ள, பல்வேறு துறைகளில் அமைப்பை வளர்க்கவல்ல பொறுப்பு களை ஏற்கும் திறனுள்ள நிர்வாகிகளை (executives) உருவாக்கிவிட முடியுமா? தற்போது இருக்கும் நிர்வாகிகள்கூட ஓர் இயக்கத்தின் விளைவாக வளர்ந்தவர்கள் ஆகும். ஆனால் அப்பொழுது கட்சியின் பணி பிரதானமாக பிரச்சாரமாக இருந்தது. எனவே அத்தகைய நிர்வாகிகளை படிப்பு வகுப்புகள் மூலமும், தோழமையுடன் கூடிப் பழகிய முறையிலும் (pesonal association) உருவாக்க முடிந்தது. ஆனால் அது இன்றைக்குப் போதாது.

தற்போது, நாம் மக்களுடனும் மக்களுக்கிடை யிலும் எவ்வாறு பணியாற்றுவது, இயக்கத்தில் குதிப்பதற்கு எவ்வாறு முன்முயற்சி எடுப்பது, எதிர் சக்திகளின் எதிர்மறை விமர்சனம் இருந்தாலும் நமது பிரத்தியேக அடையாளத்தை, பண்பை, அரசியல் சித்தாந்தத்தை பராமரித்துக் கொண்டு எவ்வாறு இயங்குவது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். இதில் ஒரு தோழரின் திறனை வளர்க்கா விட்டால், வெகுஜன இயக்கங்களை திறமையாக வழிநடத்தும் வகையில் கட்சியை மாற்றும் போக்கை சரியாக கொண்டுசெல்லத் தேவையான நிர்வாகி களையும் (excecutives) தொண்டர்களையும் உருவாக்க முடியாது.

கட்சி தற்போது பெரிதாகி இருக்கிறது. கட்சி, பல செயல்களையும் பல்வேறு மக்கள் போராட்டங் களையும் செய்து வருகிறது. எனவே, முன்பு போல் கூடிப்பழகி தோழர்களை வளர்க்கும் அளவிற்கு அத்தகைய முறையாக பயிற்றுவிக்கப்பட்டு வளர்த் தெடுக்கப்பட்ட தலைவர்கள் அன்றுடன் ஒப்பீட்டள வில் இன்று மிகக்குறைவாக இருக்கின்றனர், அல்லது கிட்டத்தட்ட பல தோழர்களுக்கு அத்தகைய தலைவர்கள் இல்லை. இது ஒரு முதல் பிரச்சினை. எப்போதுமே சில கேடர்கள் உருவாக்கப் பட்டுக் கொண்டுதான் இருப்பர். இத்தொண்டர்களின் பண்பு மேம்படுத்தப்பட்டாலும் அரசியல் முன் முயற்சியை எடுக்கும் பணியைப் பொறுத்தவரை அவர்கள் அந்த அறிவுக்கூர்மையைப் பெறவில்லை, கட்சியின் உடனடித் தேவையை நிறைவேற்றும் ஆற்றலைப் பெறவில்லை என்பதைப் பார்க்க முடிகிறது. ஒரு அளவுகோலை வைத்து மதிப் பிட்டால், அத் தோழர்கள் அர்ப்பணிப்புடன் தன்னலமற்று இருப்பதையும், அவர்களின் வாழ்க்கைக் கோட்பாடு, போராடும் வீரியம், தியாக உணர்வு எல்லாமே புரட்சிக்காகத்தான் என்றும் இருப்பதை காண முடிகிறது. அவர்களுடன் அந்த மனது இருக்கிறது. ஆனால் மக்களுடன் அவர் களால் இருக்க முடியாது. அப்படியே மக்களுடன் தங்கினாலும், ஒன்று வாதாடுவார்கள் அல்லது பிரசங்கம் செய்வார்கள். தாங்கள் அதிகமாக பயின்றவர்கள் போல் நடப்பார்கள், அதனால் மக்கள் வெட்கத்தால் பேசாமலிருந்து விடுவார் கள். அத்தகைய வாக்குவாதம் புரியும் தோழர் வந்துவிட்டால், ஒரு விரிவுரை வழங்க மதகுரு வந்துவிட்டார் என மக்கள் நினைப்பார்கள். தற்போதைய தலைமுறை பல்வேறு அம்சங்களைக் கேட்கத் தயாராக இல்லை. எனவே, மக்கள் என்ன வேண்டுகிறார்கள், எப்படி அவர்களுடன் தங்க வேண்டும், எப்பொழுது எப்படி அவர்களுக்கு விசயங்களை விளக்க வேண்டும் என்பதை நான் கற்றுக்கொள்ள வேண்டும்.

மக்கள் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதால் ஒரே நேரத்தில், சோசலிசம் என்றால் என்ன, வாழ்க்கையின் அர்த்தமென்ன, பண்பு என்றால் என்ன என எல்லவற்றையும் அவர்களுக்கு விளக்கிவிட வேண்டும் என்பது சரியல்ல. மக்கள் தலையைப் பிய்த்துக்கொண்டு எப்போதாவது மறுமொழி கூறுவார்கள். அடுத்து என்ன நடக்கும்? தொலைவிலிருந்தே நம்மைப் பார்த்தவுடன் இவர் விரிவுரை வழங்க வந்துவிட்டார் என்று அஞ்சி எதிர்த்திசையில் ஓடத் துவங்குவார்கள். இரண்டு மூன்று விவாதங்களுக்குப் பிறகு நம்மை அவர்கள் புறக்கணிக்கத் துவங்குவார்கள். அதிலிருந்து, நாம், மக்களுக்கு கற்பித்து புரியவைப்பதில் பயனில்லை என்று முடிவு செய்வோம். நாம் ஏராளமாக முயற்சிக் கிறோம், இருப்பினும் யாரும் காதுகொடுத்து கேட்க மறுக்கிறார்கள். கற்றுக்கொள்ளும் மனநிலை யாருக்கும் இல்லை என்ற முடிவிற்கு வந்து விடுவோம். நான் கேட்கிறேன், ஏன் நாம் ஒரே நேரத்தில் அவர்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டுவிட வேண்டும் என நினைக்கிறோம்? அவர்களுடன் வாழுங்கள், சேர்ந்திருங்கள், எந்த வகையிலும் தொல்லையாக உணராமல் தங்குங்கள். அவர்கள் மெதுவாகப் புரிந்து கொள்வார்கள். ஆக, நீங்கள் பொறுமைகாக்க வேண்டும். நீங்கள் சொல்வதை அவர்கள் கிரகிக்கும் வண்ணம் மெதுவாக விசயங்களை விளக்குங்கள். ஒரு பழமொழி இருக்கிறது: "பொறுமை கசக்கும், அதனால் விளைந்த பழம் இனிக்கும்".

இவ்விசயத்தில் மற்றொன்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் எல்லாமே சுருங்கி குறுகிய புரிதலைக் கொடுத்துவிடும். ஒரு புரட்சிகர தொண்டர், புரட்சியாளரைப் போன்றே பேசுவார், புரட்சிகர கோஷங்களை எழுப்புவார், புரட்சியாளர் அல்லர் என்பதுபோல் இருக்க முடியாது. நாட்டில் அநீதிக்கு ஆதரவாக ஒரு பெரும் நீரோட்டம் ஓடிக் கொண்டிருக்கிறது என வைத்துக் கொள்வோம். அச் சூழலில், ஒரு புரட்சியாளர் தனியாகவே இருந்தாலும். அந்த நீரோட்டத்திற்கு எதிராகச் செல்வார். அவரது மனநிலை சமூக அலைக்கு எதிராகவே இருக்கும். மனிதர்களுக்கு இரண்டு வேறுபட்ட மனநிலை உண்டு. சாமானிய மக்களும், அதிகம் சிந்திக்காத நடுத்தர மக்களும் போகிற அலையுடன் ஒத்துப்போகும் மனநிலையைக் கொண்டிருப்பர். காற்றடிக்கும் திசையிலேயே செல்வர். இவ்வாறாக பையன்களும் பெண் பிள்ளைகளும் நடப்பு வழக்கத்திற்கு (ஃபேஷன்) பலியாகி விடுவர். இந்த, பிறரைப்போல் நடக்கும் (immitate) மனநிலை அபாயகரமானதாகும். ஏனெனில், காப்பியடிக்கும் கலாச்சாரம் ஊடுருவ இது அனுமதித்து விடுகிறது. அப்பொழுது மாசு படாமல் மக்கள் இருக்க முடியாது. பிறரைப்போல் நடந்துகொள்வதில் நாட்டம் கொண்டுவிட்டால், மக்களிடம் என்ன மதிப்பு எஞ்சியிருக்கும்?

இதனால்தான் சீனகம்யூனிஸ்ட் கட்சியின் 10வது மாநாட்டில் இரண்டு வகையான மக்கள் இருக் கின்றனர் என கூறப்பட்டது. ஒருவகையினர், புதிதாகத் தோன்றும் போக்கை கண்மூடித் தனமாகப் பின் பற்றாமல் சரியான புரிதலுடன் சரியாக மதிப்பீடு செய்து செல்வார்கள். அவர்களின் பொதுவான சிந்தனையும் செயல்படும் பாங்கும் புதிதாகத் தோன்றிய நீரோட்டத்திற்கு எதிர்நீச்சல் அடிப்பதாக இருக்கும். அதற்கு அர்த்தம் சரியான நீரோட்டம் தோன்றும்போது அதற்கும் எதிராகப் போக வேண்டும் என்பதல்ல. இதில் குழப்பம் நேரிட்டால், நேர்மறையாக தோன்றும் எதையும் ஏற்றுக்கொள்ள இயலாதவர் ஆகிவிடுவார்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 10வது மாநாட்டில் இத்தகைய மனநிலை என்ற இவ்விசயம் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், சரியாக முன்வைக்கப்படாததால், அத்தகைய மனநிலை இருப்பதை, சூழ்நிலையைக் கணக்கு எடுத்துக் கொள்ளாமல் குறைத்து மதிப்பிடப்பட்டு விட்டது. சமூகத்தில் புதிதாக எழும் அலை, ஏற்றுக்கொள்ளத் தக்கது, புரட்சிக்கு உகந்தது எனில், ஒருவர் அதை எதிர்க்கவேண்டுமா? நிச்சயமாக அல்ல. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் அவ்வாறு சொல்லவில்லை. நீரோட்டத்திற்கு எதிராகச் செல்வது மார்க்சிச லெனினிச கோட்பாடு என்று 10வது மாநாட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது. இது மார்சிச–லெனினிச கோட்பாடு மட்டுமல்ல. எல்லா காலத்திலும் எல்லா மாபெரும் மனிதர்களும் நீரோட்டத்திற்கு எதிராகத்தான் சென்றிருக்கின்றனர்.

இரண்டுவகை மனிதர்கள் இருக்கிறார்கள்; ஒருவகை காப்பி அடிப்பவர்கள், மற்றொருவகை புதிதாகப் படைப்பவர்கள். ஒருவகையினர் சமுதாயத்திலிருந்து எடுத்துக்கொள்வதை மட்டும் செய்கின்றனர். மற்றொரு வகையினர் சமுதாயத் திற்கு திருப்பி ஏதேனும் வழங்குகின்றனர். இவ்விருவகையினரும் சமுதாயத்தில் இருக்கின் றனர். சமுதாயத்திற்கு திருப்பித்தர நினைப்பவர் களிடம் ஒரு மனநிலை, எதிர்நீச்சல் போடும் மனநிலை இருக்கின்றது. அவர்கள் சமூக நீரோட்டத் திற்கு பலியாகி விடுவதில்லை. இதைத்தான் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 10வது மாநாடு மிகச் சிறப்பாக கூறியிருக்கிறது. அதே சமயம், சமூகத்தில் போராட்ட அலை, புரட்சி நீரோட்டம் எழுந்தால் மார்க்சிச–லெனினிச கோட்பாடு அதற்கு எதிராகப் போகச் சொல்லுகிறது என நினைக்கக்கூடாது. அது தவறான புரிதலாகும்.

புரட்சிகர அலை எழும்போது, மக்கள் அதில் குதிக்கின்றனர். பலர் தியாகிகளாக ஆகின்றனர். சிலர் இப் போராட்டத்தின் மூலமாக தலைவர் களாக உருவாகின்றனர். இந்தக் கணத்தில், மக்களின் கண்மூடித்தனத்தை ஒவ்வொரு மட்டத்திலும் எதிர்த்துக் களையாமல், மக்களுக்கு கற்பிப்பதில் தவறினால், அப்புரட்சி அலையை கண்மூடித்தனமும் பலதவறான போக்குகளும் மூடி மறைத்து விடும். அப்போழுது, புரட்சி வெற்றி பெற்றாலும் அதன் பிறகு பல இடர்பாடுகள் எழும். ஆனால் அதற்காக அஞ்சுவதற்கு ஏதுமில்லை. அத்தகைய தவறான போக்குகளை முன்கூட்டியே இனம் காணும் எச்சரிக்கை கொண்ட தலைமையே சரியான புரட்சிகரத் தலைமையாகும் ■

# ஈவிரக்கமற்று பெட்ரோல் மீது . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

சுத்திகரிப்பு நிறுவனங்கள் மிக அதிக நேரம் பணியாற்றுகின்றன. இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் பணியாற்றுவது வருடத்திற்கு *93%* திலிருந்து மே மாதம் *110%*மாக எகிறியது. ஏப்ரல்–ஜூன் மாதங்களில் டீசல், பெட்ரோல், ஜெட் எரிபொருள், நாப்தா ஆகியவற்றை இறக்குமதி செய்ததைக் காட்டிலும் *60%* அதிகமாக இந்தியா ஏற்றுமதி செய்தது. ஜூலையில் ரஷ்யாவின் மொத்த தொகுப்பின் *60%* இந்தியா எடுத்துக் கொண்டது. மிகப் பெரிய தொகுப்பான நாளொன்றுக்கு 2,50,000 பேரல்கள் சிக்கா துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. அது ஜாம் நகரிலுள்ள அம்பானியின் ரிலையன்ஸ் இண்டஸ்டிரிஸ்க்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதைப்போன்றே ஹெச்எம்இஎல் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசனுடன் பைப் லைன் வசதி வைத்திருக்கும் அதானிக்குச் சொந்தமான முந்த்ரா துறைமுகமும் செய்தது.

அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாக இருக்கக்கூடிய பெட்ரோல்–டீசல் விலை உயர்வின் காரணமாக நாட்டு மக்கள் ரத்தம் சிந்திக்கொண்டிருக்கையில் ஆளும் கட்சிக்கு நெருக்கமாக இருக்கக்கூடிய இவ்விரண்டு ஏகபோக பகாசுர குழுமங்கள் மட்டும் எண்ணெய் வியாபாரத்தின் மூலம் மிகப்பெரும் லாபத்தை குவித்திருக்கிறார்கள். உள்நாட்டில் எண்ணெய் விநியோகம் சுருக்கப் பட்டு ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டுள்ளது. ரஷ்யா விடமிருந்து மிக குறைந்தவிலைக்கு எண்ணெய் வாங்கும்போது ஏன் இந்தியாவின் உள்நாட்டு விலை இவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதுவே முக்கிய கேள்வியாகும்.

இவ்வாறுதான் பகாசுர நிறுவனங்களின் லாபத்திற்காக பாஜக ஆட்சியானது மக்களை மோசடி செய்துவருகிறது ■

# அமெரிக்காவிலுள்ள ஸ்கிட்ரோ மாவட்டத்தின் கதை

*அமெரிக்காவில் உள்ள வசதியான மாநிலமான கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஏஞ்செல்சின் ஒரு மாவட்டம் ஸ்கிட் ரோ ஆகும். கலிபோர்னியாவிலிருந்து 3 நிமிட பயணத்தில் இங்கு சென்றுவிடலாம். அமெரிக்காவில் உள்ள முதன்மை கோடீஸ்வரர்களில் 186 பேர் கலிபோர்னியாவில் உள்ளனர். அதற்கடுத்து இரண்டாவது இடத்தில் தான் நியூயார்க் வருகிறது, அங்கே 135 கோடீஸ்வரர்கள் உள்ளனர். ஸ்கிட் ரோவின் கதை அமெரிக்காவின் கதையாகும். அது அமெரிக்காவின் வீடில்லாதவர்களின் கதை. கொழுத்த பணக்கார நாட்டின் மற்றொரு முகம் ஸ்கிட் ரோ. அந்தப் பகுதியைச் சுற்றிலும் வானுயர் கட்டிடங்களுள்ள பகுதிகள் உள்ளன. அங்கும் இங்கும் ஒப்பிட்டால் முற்றிலும் வேறுபாடாக இருப்பதை காணமுடியும். வீடே இல்லாமல், உயிர்வாழ்வதற்கே போராடும் சுமார் 600 குடும்பங்களுக்கு ஸ்கிட் ரோ தெருக்கள்தான் வீடாகும். தற்காலிகக் கூடாரங்கள், தார்ப்பாய்கள், குடிசைகள், பயன்படுத்தப்படாத வாகனங்கள்தான் அவர்கள் வசிக்கும் இடங்களாகும். அங்கே ஒருசில பொது கழிப்பறைகள் உள்ளன, ஆனால் அடிப்படை வசதிகள் ஏதுமில்லை. நகரங்களில் குப்பைகளை சேகரிப்பவர்கள், தெருக்களை சுத்தம் செய்பவர்கள் இந்தப் பகுதிகளுக்கு வருவதே இல்லை. அங்கு வசிக்கும் மக்களின் நிலை பரிதாபகரமானது. அருகிலிருக்கும் பகுதிகளின் குப்பைக் கிடங்குகளிலிருந்துதான் உணவு, உடை, இதர அன்றாட தேவைக்கான பொருட்களை இவர்கள் சேகரிக்கின்றனர். அது பெரும் அவலமாக உள்ளது என்று கூறி, அதையும் நிர்வாகம் பூட்டிவிட்டது. அங்கு வாழும் மக்களின் சராசரி ஆயுட்காலம் 48 வருடங்களாகும், இது அமெரிக்க சராசரியை விட 20 வருடங்கள் குறைவாகும்.*

அமெரிக்காவோடு கலிபோர்னியா இணைந்ததிலிருந்தே ஸ்கிட் ரோ கதையும் தொடங்குகிறது. தங்கத்தின் மீதான ஈர்ப்பு, வேலை வாய்ப்பு ஆகியவற்றால் கிழக்கிலுள்ள மக்கள் மேற்கிற்கு புலம் பெயர்கின்றனர். லாஸ் ஏஞ்செல்சை இணைக்கும் ரயில்பாதையில் ஸ்கிட் ரோ விலும் நிறுத்தம் உள்ளது. அங்கே அருகிலுள்ள வசதியானவர்கள் இந்த வீடில்லாமல் இருப்பவர்களை தீண்டத்தகாதவர்களாக நடத்துகின்றனர். 1970களில் இப்பகுதிகளில் மக்கள்தொகை அதிகரிப்பதை கட்டுப்படுத்த, பழைய கட்டிடங்களை இடித்துவிட்டு புதிய உயரமான கட்டிடங்களை எழுப்ப நகரமைப்பு திட்டமிடும் அதிகாரிகள் முடிவு செய்தனர். அதாவது அந்தப் பகுதியையே அழிப்பதற்கு முடிவு செய்தனர், ஆனால் ஸ்கிட் ரோ பகுதி மக்கள் அத்திட்டத்தை முறியடித்தனர். ஒரு ஸ்கிட் ரோவை அழித்தால் லாஸ் ஏஞ்செல்ஸ் முழுவதும் இதேபோன்ற பல சிறுசிறு ஸ்கிட் ரோக்கள் உருவாகும் என்று எச்சரித்தனர். இதனால் அதிகாரிகள் உஷாரானார்கள். இந்தப் பகுதியை மேம்படுத்துவதற்கு மாறாக, அருகிலுள்ள பகுதிகளில் வானுயர் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஏதுவாக, இந்தப் பகுதியை ஒரு கட்டுப்படுத்தப்பட்ட, தனிமைப்படுத்தப்பட்ட பகுதிபோல் ஆக்கினர். பொது கழிப்பறைகளையும் பெஞ்ச் இருக்கைகளையும் கட்டினர். 'விரும்பத்தகாத மக்களை ஸ்கிட் ரோவில் வைத்துக்கொள்ளலாம்' என்று கூறினர். எந்த வசதியுமின்றி, நிர்க்கதியாக நிற்கும் மக்கள் 'விரும்பத்தகாத மக்களாம்'! எப்படிப்பட்ட குரூர புத்தி?

ஸ்கிட் ரோவுக்கும் அருகாமை பகுதிகளுக்கும் இடையே பிரம்மாண்டமான சிறையிலிருக்கும் விளக்குகளை போன்று விளக்குகளை அமைத்தனர். இதன்மூலம் இந்தப் பகுதிமக்கள் வசதியான பகுதிக்குள் செல்லாமல் தடுத்தனர். அருகாமை பகுதிகளின் குப்பைத் தொட்டிகளுக்கு பூட்டு வழங்கினர். அப்போதுதான் ஸ்கிட் ரோவில் இருக்கும் மக்கள் உணவுக்காக அங்கிருக்கும் குப்பைத் தொட்டிகளுக்கு செல்லமாட்டார்களாம். உணவில்லாமல் பசியால் வாடும் சொந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிப்பதற்கு எந்த வழியும் செய்யாமல், குப்பைத் தொட்டிகளில் வீசப்படும் மிச்சம் மீதி உணவுகளைக்கூட உண்டு உயிர்வாழக் கூடாது என்று தடுத்தனர். ஏதுமில்லாதவர்களுக்கு கிட்டத்தட்ட மரண தண்டனை! இது ஏழைகளை கொஞ்சம்கூட மனிதாபிமானமில்லாமல் நடத்துவதாகாதா?

1990களில் மனநோயாளிகளுக்கான நிதி காலியானவுடன் மனநல காப்பகங்களும் மருத்துவமனைகளும் அந்த நோயாளிகளை ஸ்கிட் ரோவில் கொண்டு வந்து விட்டுவிடுவர். இதன் மூலம் அவர்கள் வேறு எங்கும் செல்லமுடியாமல் தடுக்கப்பட்டு விடுவார்களாம். இந்த பகுதிக்கு காவல்துறையினர் அடிக்கடி வருவர். இங்கிருந்து மக்கள் வெளியேறிவிடுவார்களோ என்று கண்கொத்திப் பாம்பு போன்று பார்த்துக் கொண்டே இருந்தனர். வேலையில்லாத, வீடில்லாதவர்களை நகரத்திற்குள்ளேயே ஒரு நகரத்தில் (நரகத்தில்) அடைப்பது நிர்வாகத்தின் அலட்சியப் போக்கையே காட்டுகிறது. வேலையின்மை, அதிக வாடகை, மனநோய், போதைக்கு அடிமையாதல் போன்ற உண்மையான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. கொரோனா நோய்த்தொற்றுப் பரவல் மற்றும் பொருளாதார நெருக்கடியால் அத்தியாவசியப் பொருட்களின் விலை மேலும் அதிகரித்துவிட்டது. இது நிலைமையை மேலும் மோசமாக்கிவிட்டது.

ஸ்கிட்ரோவைப் போன்ற பகுதிகள் அமெரிக்காவின் பல நகரங்களிலும் உள்ளன. அமெரிக்காவில் 2020ல் 5,80,466 பேர் வீடின்றி இருப்பதாகவும், அதில் 4,06,326 பேர் தனிநபர்கள், 1,74,39 பேர் குடும்பமாக இருப்பவர்கள் என்று அதிகாரப்பூர்வ தகவல் தெரிவிக்கிறது. கலிபோர்னியாவில் 1,61,548, நியூயார்க்கில் 91,271, ஃப்ளோரிடாவில் 27,487 பேர் வீடில்லாமல் உள்ளனர். இவைதான் அமெரிக்காவின் மூன்று வசதியான மாநிலங்களாகும். அனைத்து மாநிலங்களிலும் வீடில்லாதவர்கள் இருக்கின்றனர், இந்த எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துக்கொண்டும் இருக்கிறது என்று நியூயார்க் டைம்ஸ் கூறுகிறது. 'தங்க உதவி கேட்டு வருவோரின் எண்ணிக்கை சமீப காலமாக இரு மடங்கு, மூன்று மடங்காகிவிட்டது என்று அமெரிக்காவில் வீடு வைத்திருப்போர் கூறுகின்றனர். பணவீக்கம் இதனை மேலும் அதிகப்படுத்திவிட்டது. 1986க்குப் பிறகு சமீப காலமாக வீட்டு வாடகைகள் வேகமாக அதிகரிகின்றன. இதனால் அமெரிக்கர்களுக்கு குடியிருக்க வீடும் அடுக்குமாடி குடியிருப்புகளும் கிடைப்பது அரிதாகிவருகின்றது. ... இன்று இரவு எங்கு உறங்குவது என்று தெரியாமல் பலர் இருக்கின்றனர் ... நோய்ப்பெருந்தொற்று காலத்திற்கு முந்தைய சில ஆண்டுகளோடு ஒப்பிடுகையில் தற்போது வீடில்லாமல் இருப்பதைக் கண்டு மிகவும் கவலைப்படுவதாக ஏராளமான அமெரிக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். குறைந்த வாடகை மட்டும் செலுத்தும் நிலையிலுள்ள 70 லட்சம் பேருக்கு வீடே கிடைக்கவில்லை என்று 'தேசிய குறைந்த வருவாய் உள்ளோருக்கான வீடு வழங்கும் திட்டம்' தெரிவிக்கிறது.

அமெரிக்காவில் வீடின்றி தவிப்பவர்கள் யார்? இத்தகையோரின் வெள்ளையர்கள் ஆசியாவினரைக் காட்டிலும் ஆப்பிரிக்க அமெரிக்கர்களும் பூர்வ குடியினருமே அதிகமானவர்களாக இருக்கின்றனர். இவர்களுக்கு பெயிண்டிங், பிளம்பிங், இயந்திரங்கள் பராமரிப்பு போன்ற வேலைகளைச் செய்யும் திறன் உள்ளது. அந்த வேலைகளைச் செய்ய தயாராகவும் உள்ளனர். ஆனால் அவர்களுக்கு உரிய வேலை கிடைக்கவில்லை. அதோடு நன்கு படித்துவிட்டு வேலைக்கு செல்லும் இளைஞர்களாலும் நகரங்களில் வீட்டுவாடகை கொடுக்க இயலாததால் இந்தப் பகுதிகளில், தங்கள் வாகனங்களிலேயே வசிக்கின்றனர், சில நேரங்களில் தற்காலிகமாக வசிக்கின்றனர். இவர்களைத் தவிர பணியிலிருந்து ஓய்வு பெற்ற முதியவர்களும் வசிக்கின்றனர். தாங்கள் பணி செய்த காலத்தில் சமூக பாதுகாப்பிற்காக வரி செலுத்தியவர்கள். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு இந்த சமூக பாதுகாப்பு திட்டங்களே நமக்குப் போதுமென்று எண்ணி எந்த சேமிப்பும் செய்யாதவர்கள். தற்போது அவர்களுக்கு கிடைக்கும் சமூக பாதுகாப்பு தொகையோ அவர்களது சாப்பாட்டிற்கே போதுமானதாக இல்லை.

அமெரிக்காவின் பல்வேறு போர்களில் சண்டையிட்ட மூத்தகுடிமக்களின் நிலை என்ன? அமெரிக்காவில் வீடின்றி இருப்போரில் முதியவர்கள் 11 சதவீதம் பேராவர். சுமார் 40,000 முதல் 60,000 முதியவர்களுக்கு உறங்க வீடு கிடையாது. இதில் 50 சதவீதம் பேர் 51 வயதுக்கு மேற்பட்டவர்களாவர் என்பது மற்றொரு வேதனையான விசயமாகும். வேலையில்லாதவர்கள், தனிநபர்கள், குடும்பத்தினர், மூத்தகுடிமக்கள், ஓய்வுபெற்ற முதியவர்கள், சில புதிய இளம் பருவத்தினரும் கூட தெருக்களில் வசிக்கின்றனர்.

வீடற்றவர்கள் எல்லாம் போதைக்கு அடிமையானவர்கள் என்று கதை கட்டுகின்றனர். வீடு இல்லாமல் இருப்பவர்களில் எத்தனை சதவீதத்தினர் போதைக்கு அடிமைகள் என்று ஒரு கணக்கெடுப்பு கூட கூறவில்லை. அந்த கட்டுக் கதை உடைத்தெரியப்படவேண்டும். போதைக்கு அடிமையாவது அமெரிக்காவில் ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது உண்மைதான். அது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சொல்லப்போனால் 'வீடில்லாமல் இருப்பதும் போதைக்கு அடிமையாக காரணம்' என்று தெரியவருகின்றது தெருக்களில் வசிப்பதே மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தி அதனால் சிலர் போதைக்கு அடிமை ஆகின்றனர் என்பதும் தெரியவருகிறது.

வீடு இல்லாதவர்கள் தங்குவதெற்கென்று போதிய தங்குமிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று ஒரு கட்டுக்கதை பரப்புகின்றனர். ஆனால் அங்கே சமீப காலங்களாக படுக்கைகள் குறைக்கப்பட்டுள்ளன. தங்க இடம் கேட்டு விண்ணப்பித்து ஒவ்வொரு நாளும் 1000 பேருக்கு மேல் காத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

வீடு இல்லாதவர்கள் வேலை செய்ய விரும்பவில்லை என்ற மற்றொரு கட்டுக்கதை பரப்பப்படுகின்றது. ஆனால் உண்மை என்ன வென்றால், அவர்களுக்கு பல வேலைகளைச் செய்யக்கூடிய திறமை உள்ளது, வேலை செய்ய விரும்புகின்றனர், ஆனால் வேலை இல்லை. அவர்களுக்கு முகவரியோ, இணையதள வசதியோ இல்லாததால் வேலை கிடைப்பது மேலும் சிக்கலாகின்றது.

வீடு இல்லாமல் இருப்பதற்கு பொருளாதாரமே காரணம். வேலைச் சந்தை சுருங்கிக்கொண்டே வருகின்றது, குறிப்பாக கொரோனா நோய்ப் பெருந்தொற்றிற்குப் பிறகு அது மேலும் சுருங்கிவிட்டது. எனவே அவர்கள் வேலையின்றி உள்ளனர். மூத்தகுடிமக்கள், ஓய்வு பெற்றவர்களுக்கான சமூக பாதுகாப்புத் தொகை மிகவும் குறைவு. நகர்ப்புறப் பகுதிகளில் வாடகை வீடுகள் அதிகரித்துள்ளன. அங்குள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் ரூ1000 டாலர் முதல் 3000 டாலர் வரை வாடகை வசூலிக்கப்படுகின்றது. இந்த வாடகை என்பது குறைந்தபட்ச ஊதியத்தை விட அதிகமாகும். ஊதியத்தை விட வீட்டு வாடகையே அதிகமென்றால் அந்த குடும்பத்தின் இதர செலவுகளுக்கு அவர்கள் எங்கே போவார்கள்? கட்டுபடியான தொகையில் வீடு வழங்குவது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்தவே இல்லை. இதனால் வீடு இல்லாதவர்கள் உருவாகின்றனர். அந்த எண்ணிக்கை சமீப காலமாக அதிகரித்துள்ளது, எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கும்.

அமெரிக்கா ராணுவத்திற்கு மட்டுமே ஆண்டொன்றிற்கு 780 மில்லியன் டாலர்கள் செலவழிக்கிறது. உலகில் அமெரிக்காவுக்கு அடுத்து உள்ள 11 நாடுகளின் மொத்த ராணுவச் செலவுக்கு நிகராக அமெரிக்கா ஒரு நாடு மட்டும் செலவு செய்கிறது. உலகிலேயே பணக்கார நாடான அமெரிக்கா தனது சொந்த மக்கள் வேலையின்றி, வீடின்றி, அடிப்படை வசதியின்றி தவிக்கும்போது அவர்களுக்குத் தேவையானவற்றை செய்யாமல் இவ்வளவு பெரிய தொகையை எதற்காக ராணுவத்திற்கு செலவு செய்கின்றது? பிரச்சினை அதன் பொருளாதார அமைப்பில் உள்ளது. அதாவது அதிகபட்ச லாபமீட்டுவதையே குறிகோளாககொண்டு செயல்படும் முதலாளித்துவ ஏகாதிபத்திய பொருளாதாரமும் ஏகபோக முதலாளித்துவத்திற்கு சேவகம் செய்யும் அரசும் நிதி மூலதனமுமே இதற்குக் காரணமாகும். இந்த பொருளாதார அமைப்பில் பாடுபடும் மக்கள் சுரண்டப்படுகின்றனர், குறைந்த ஊதியமே

தொடர்ச்சி 8ம் பக்கம்

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

பாட்டாளி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர் தோழர் சிப்தாஸ் கோஷ் பிறந்த நூற்றாண்டு துவக்க விழா





**புதுச்சேரி எஸ்யுசிஐ(கம்யூனிஸ்ட்) கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் லெனின் துரை உரையாற்றுகிறார், மேடையில் தோழர்கள் சிவக்குமர் ஏஐயுடியுசி மாநிலச் செயலாளர், சங்கரன் ஏஐயுடியுசி மாநில தலைவர், ரெங்கசாமி தமிழ்நாடு மாநிலச் செயலாளர், அனவரதன் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி உறுப்பினர்**

# குறைந்தபட்ச ஆதார விலை (எம்எஸ்பி) குறித்த ஏஐகேகேஎம்எஸ் கருத்தரங்கம், டில்லி




**மேடையில் சம்யுக்த கிசான் மோர்ச்சா, ஏஐகேகேஎம்எஸ் தலைவர்கள்**



**கருத்தரங்கில் பங்கேற்றோர்**

# தேசிய கல்விக் கொள்கை 2020ஐ எதிர்த்துப் போராடுவோம்

## அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி, தமிழ்நாடு

*ஈஸ்வர் சந்திர வித்யாசாகர் பிறந்த நாளை கல்வி பாதுகாப்பு தினமாக அனுஷ்டிக்கும் விதமாக சென்னையில் செப்டம்பர் **25, 2022** அன்று கருத்தரங்கம் நடைபெற்றது.*


பேரழிவை ஏற்படுத்தும் தேசிய கல்விக் கொள்கை (NEP) **2020**ஐ எதிர்த்தும், மதச்சார்பற்ற, அறிவியல்பூர்வ, ஜனநாயகபூர்வ கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியும் அகில இந்திய கல்வி பாதுகாப்பு கமிட்டி (AISEC) ஏஐஎஸ்இசி சார்பாக நடைபெற்ற கருத்தரங்கிற்கு அக்கமிட்டியின் மாநில குழு உறுப்பினரும் A3 அமைப்பின் தலைவருமான ஆசிரியை உமா மகேஸ்வரி தலைமை வகித்தார்.

கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், சான்றோர்கள், பொதுமக்கள் கருத்தரங்கில் பங்கேற்றனர். பேராசிரியர் K யோகராஜன் உரையாற்றினர்.


கல்வியை முற்றிலும் தனியார்மயம் வியாபார மயம் கார்ப்பரேட்மயம் மதமயம் ஆக்கும் என்இபி (NEP) **2020** பொதுக் கல்வியை அழிப்பதோடு மனித குல நாகரிகத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி விடும். மறுமலர்ச்சி கால முன்னோடிகள் விடுதலைப் போராட்ட வீரர்களின் கனவுகளுக்கு இது நேர் எதிரானதாகும். தொடர்ந்து கல்வி தரம் சீரழிந்து வரும் நிலையில் அதற்கு தீர்வு காண்பதற்கு மாறாக மேலும் அதிகப்படுத்துவதாக என்இபி **2020** இருக்கிறது. நாடு முழுவதும் கல்வியை நேசிப்பவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் போதிலும் அதன் ஷரத்துக்களை அதிதீவிரமாக நாடு முழுவதும் மத்திய அரசாங்கம் அமுல்படுத்தி வருவது அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது சாமானிய மக்களின் கல்வி உரிமையை பாதுகாக்க கல்வியை நேசிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

என்இபி **2020**ஐ எதிர்ப்பதாக தமிழக அரசாங்கம் கூறினாலும் இல்லம் தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் போன்ற திட்டங்கள் என்இபி **2020**யின் உள்ளடக்கமே ஆகும். மேலும் நான் முதல்வன் என்ற திட்டமும் உயர்கல்வியை முழுவதும் தொழில் மையக் கல்வியாக ஆக்குவதோடு அரசு கல்லூரிகளிலேயே தனியார் கல்வி நிறுவனங்கள் மூலமாக இணைய வழியில் நடத்துவதற்கு கல்வி கட்டணம் வசூலிக்க அனுமதிக்கிறது. என்இபி **2020**ல் ஷரத்துக்களை தமிழக அரசாங்கம் தீவிரமாக அமுல்படுத்தி வருகிறது என்று கருத்தரங்கில் பேசியவர்கள் தெரிவித்தனர்.

இக் கருத்தரங்கின் ஒரு நிகழ்ச்சியாக ஈஸ்வர சந்திர வித்யாசாகர் வாழ்க்கை வரலாறு குறித்து திரு நல்லு லிங்கம் அவர்கள் எழுதிய நூல் வெளியிடப்பட்டது ■



**மேடையில் கல்வியாளர்கள்**



**கருத்தரங்கில் பங்கேற்றோர்**

# சுதந்திரப் போராட்ட வீரர் மகாகவி பாரதியாரின் 101வது நினைவு தினம் ஏஐடிஎஸ்ஓ, ஏஐடிஓய்ஓ, ஏஐஎம்எஸ்எஸ் அனுஷ்டிப்பு



**சென்னை**




**தேனி**



**புதுக்கோட்டை**

# அமெரிக்காவிலுள்ள . . .

*7ம் பக்கத் தொடர்ச்சி*

*பெறுகின்றனர், இதனால் வாங்கும் சக்தி குறைகின்றது. விலைவாசி அதிகரிக்கின்றது, பணவீக்கம் அதிகரிக்கிறது, வேலையின்மை அதிகரிக்கிறது. நிரந்தரவேலையுமில்லை.இதனால் சந்தை மேலும் சுருங்குகிறது. லாபத்தை அதிகரிக்க விலையை ஏற்றுகின்றனர். ஆட்குறைப்பில் ஈடுபடுகின்றனர். இதனால் வேலையின்மை மேலும் அதிகரிக்கின்றது. சந்தையை பிடிக்க செயற்கையாக போர்களை நடத்துகின்றனர். இப்படியாக மக்கள் வரிப்பணத்தை உருப்படி யில்லாமல் செலவு செய்து மக்களின் சுமையை மேலும் அதிகரிக்கின்றனர். இவ்வாறாக வேலையின்மையை முதலாளித்துவமே உருவாக்கு கின்றது.*

எனவேதான் முதலாளித்துவ நாடுகளில் இருப்போருக்கும் இல்லாதோருக்குமான இடைவெளி தொடர்ந்து அதிகரிக்கின்றது. ஒருபுறம் மாட மாளிகைகள். மற்றொருபுறம் இருக்க இடமில்லை, உடுத்த உடையில்லை, புசிக்க உணவில்லை என லட்சக்கணக்கான மக்கள் வாடி வதங்குகின்றனர். செல்வந்தர்கள் மாட மாளிகை களிலும், ஏழை, எளிய, ஏதுமில்லாதவர்கள் ஸ்கிட்ரோ போன்ற இடங்களிலும் காலத்தைத் தள்ளுகின்றனர். இதுதான் முதலாளித்துவத்தின் இரண்டு முகங்கள். குறைவாக வளர்ந்துள்ள, வளர்கின்ற நாடுகளில் இதன் கோரமுகம் அதிகமாக உள்ளது. உலகின் பணக்கார நாடு என்று தம்பட்டமடித்துக் கொள்ளும் நாடும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதற்கு ஸ்கிட்ரோ ஒரு உதாரணம் ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094,* ***ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***

Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**